
# தமிழ்த் தேசம்

தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

2014 வைகாசி (மே–சூன்) ஆசிரியர்: தோழர் **தியாகு** தனிச்சுற்றுக்கு மட்டும் நன்கொடை ரூ. **10/-**


















# இலங்கையில் காமன்வெல்த் எதிர்ப்பியக்கம்






# சூன் 12
# சூன்யமாகிப் போனதேன்?

**சூன்** 12 – ஆண்டுதோறும் மேட்டூர் அணையிலிருந்து காவிரிப் பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விடும் நாள் என்பது கடந்த காலப் பழக்கம். கடந்த காலம் என்றால் 1925 முதல் 1975 வரை நிலவி வந்த பழக்கம். அதாவது தமிழகத்துக்கும் கர்நாடகத்துக்கும் காவிரி நீர்ப் பகிர்வு தொடர்பான ஐம்பதாண்டுக் கால ஒப்பந்தம் செயலில் இருந்த காலத்தில் அநேகமாய் ஒவ்வோராண்டும் இது முறையாக நடைபெற்று வந்தது. 1947 வரை வெள்ளையராட்சியிலும், பிறகு இந்தியராட்சியிலும் இந்த ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. 1975உடன் காவிரி ஒப்பந்தம் முடிந்த பிறகு புதிய ஒப்பந்தம் செய்யப்படவில்லை, இதற்குத் தமிழகத்தின் காவிரி உரிமையை மறுத்த கர்நாடக அரசின் அழிச்சாட்டியமே காரணம்.

கடந்த கிட்டத்தட்ட நாற்பதாண்டுக் காலத்தில் ஓராண்டு கூட சூன் 12இல் மேட்டூர் அணை திறக்கப்பட்டிருக்குமா என்பது ஐயத்துக்குரியதே. இதனால் காவிரிப் பாசனப் பகுதியில் ஐந்து லட்சம் எக்டேருக்கு மேல் நடைபெற வேண்டிய குறுவை நெல் சாகுபடி பெரும்பாலும் அற்றுப் போய்விட்டது. தாளடி, சம்பா நெல் சாகுபடியும், கரும்பு, பிற வகைப் பயிர்ச் செலவும் குறுகிச் சிறுத்து விட்டன.

காவிரி உரிமைக்காக நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். தமிழக அரசும் தில்லி அரசிடம் பேசிக்கொண்டே இருக்கிறது. நீதிமன்ற வழக்குகள் பெரும் இழுத்தடிப்புகளுக்குப் பிறகாவது தமிழகத் தரப்பு நியாயத்தை ஓரளவு நிறுவியுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக சட்டப்படி தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு இடைக்காலத் தீர்ப்பு, இறுதித் தீர்ப்பு எல்லாம் வாங்கிவிட்டோம். இறுதித் தீர்ப்பினை அரசிதழில் வெளியிடச் செய்வதற்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்காடி வெற்றி பெற்றதையே தமிழக முதல்வர் தாம் பெற்ற பெருவெற்றியாகக் கொண்டாடினார்.

இறுதித் தீர்ப்பின்படி தண்ணீரைப் பகிர்ந்து கொடுப்பதற்கான காவிரி மேலாண்மை வாரியமும், அதன் கீழ் செயல்படுவதற்கான காவிரி ஒழுங்குமுறை ஆணையமும் அமைக்கப்படாத வரை தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான். ஆனால் சட்டப்படியான இந்த வாரியத்தையும் ஆணையத்தையும் அமைக்கக் கூடாது என்று கர்நாடகம் மல்லுக்கட்டுகிறது. 'யாமிருக்க பயமேன்?' என்று தில்லியும் அதற்கு ஆபத்பாந்தவனாக அடைக்கலம் கொடுக்கிறது. இதில் மன்மோகன் வழியிலேயே நரேந்திர மோதியும் செயல்படுகிறார். தமிழகத்தை வஞ்சிப்பதில் காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கும்



பாசக தலைமையிலான அரசுக்கும் நூலிழை வேறுபாடுமில்லை.

இந்த ஆண்டும் சூன் 12 காய்ந்து கிடக்கும் காவிரிப் படுகை ஈரம் காணாத நாளாகவே போய்விட்டது. அந்த நாளில் மேட்டூர் அணையைத் திறக்க இயலாது என்று தமிழக முதல்வர் அறிவித்து விட்டார். அணையில் வெறும் 44 அடி உயரத்துக்குத்தான் தண்ணீர் நிற்கிறது. எப்படித் திறக்க முடியும்? என்று நம்மவர்களே கேட்கிறார்கள். உண்மைதான். ஆனால் தண்ணீர் இவ்வளவு குறைவாக இருப்பதற்கு யார் காரணம்?

சூன் 11ஆம் நாள் கர்நாடக அணைகளில் எவ்வளவு தண்ணீர் தேங்கியிருந்தது என்பது தமிழக முதல்வருக்குத் தெரியுமா? இந்தியத் தலைமையமைச்சருக்குத் தெரியுமா?

**இதோ நாம் திரட்டிய தகவல்கள்:**

2014 சூன் 11ஆம் நாள் கிருஷ்ணராஜசாகர் எனப்படும் கண்ணம்பாடி அணையில் நீர் மட்டம்: 91 அடி. மேட்டூரில் வெறும் 44 அடி. கண்ணம்பாடியில் திறந்து விட்டால்தான் மேட்டூர் மட்டம் உயரும். கண்ணம்பாடிக்கு வந்து சேரும் நீரின் அளவு: 18,967 நொடிக் கன அடி (cusecs). அங்கிருந்து வெளியேறும் நீரின் அளவு 324 நொடிக் கன அடி. அதாவது கண்ணம்பாடிக்கு வருவது ஒரு நொடிக்குச் சுமார் 19,000 கன அடி, அங்கிருந்து வெளியே விடப்படுவது ஒரு நொடிக்கு வெறும் 324 கன அடி மட்டுமே. மேட்டூர் போதிய நீர் இல்லாமல் காய்வதற்குக் காரணம் புரிகிறது அல்லவா?

> பா.ச.க. தலைமையமைச்சர் நரேந்திர மோதி இந்தித் திணிப்புக் கொள்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளார். ஐயோ, இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து என்ற புலம்பல் கேட்கிறது. இதற்கெல்லாம் அசைந்துகொடுக்கக் கூடியவரா மோதி?
>
> **அவர் இந்தியைத் திணிக்கட்டும்!**
>
> **இந்தியாவை உடைக்கட்டும்!**

இது மட்டுமல்ல. 1975இல் ஒப்பந்தம் முடிந்த பிறகு கர்நாடகம் தமிழகத்தின் ஒப்புதல் பெறாமல் சட்டப் புறம்பாகக் கட்டிய அணைகளிலும் நீர் அலையடித்துக் கிடக்கிறது. காட்டாக, ஏமாவதி அணையின் உயரம் 2922 அடி; சூன் 11ஆம் நாள் அந்த அணையில் நீர் மட்டம் 2882 அடி. நீர் வரத்து: 14,152 நொடிக் கன அடி; நீர்ப் போக்கு: 150 நொடிக் கன அடி.

குடகுப் பகுதியில் நல்ல மழை பெய்து ஆரங்கி அணையும், மேற்குத் தொடர்ச்சி மலையில் பெருமழை பொழிந்து கபினி அணையும் நிறைந்து வருகின்றன, கர்நாடகத்தில் ஏரிகள், குளங்களில் கொண்டுபோய்த் தேக்கப்படும் காவிரித் தண்ணீருக்கும் பஞ்சமில்லை.

மேட்டூரிலிருந்து இந்த ஆண்டும் சூன் 12ஆம் நாள் தண்ணீர் திறந்து விட முடியாமைக்குக் காரணம் கர்நாடகத்தின் வஞ்சகமும், அதற்குத் துணை போகும் தில்லியின் சூழ்ச்சியுமே தவிர வேறல்ல. நம்மூர்க் 'காவிரி கொண்டான்'களும் 'காவிரி தந்த கலைச் செல்வி'களும் தமிழர்களுக்கு இந்த உண்மைகளைச் சொல்வார்களா?

தமிழர்களே, தமிழர்களே, நாம் எல்லாருமே காவிரி மக்கள், காவேரி மைந்தர்கள்! சிறைப் பட்ட காவிரித் தாயை மீட்கக் களமாட எழுவோம்! ❖


## நாடு கடந்த தமிழீழ அரசாங்கப் பிரதமர்
## உருத்திரகுமாரன் அறிக்கை

# முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்செயல்கள் சிங்கள பௌத்த மேலாதிக்க இனவெறியின் மற்றுமொரு கோரமுகம் மட்டுமே!

கடந்த சில தினங்களாகத் தென்னிலங்கையில் மிகத் திட்டமிட்டு அப்பாவி முஸ்லீம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இனவன்செயல்கள் இன்றைய தினத்தில் (17.06.2014) மத்திய மலைநாட்டின் பதுளை போன்ற நகரங்களிலும் முஸ்லீம் மக்களின் பாதுகாப்பினை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளன.

சிறீலங்காவின் மேல் மாகாணத்தில் உள்ள களுத்துறை மாவட்டத்தில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் அளுத்கமை, தர்க்காநகர் ஆகிய பகுதிகளில் பௌத்த பல சேனாவின் நேரடி நெறிப்படுத்தலில் முன்னெடுக்கப்பட்டுள்ள முஸ்லீம்களுக்கு எதிரான வன்செயல்களையும் அப்பாவி முஸ்லீம் மக்களின் வழிபாட்டுத் தலங்கள், பொருளாதார மையங்கள், குடியிருப்புக்கள் எல்லாம் நிர்மூலமாக்கப்பட்டு அவர்களை அவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த பிரதேசங்களிலிருந்து வெளியேற்ற முயல்வதும் சிங்கள பௌத்த மேலாதிக்க அரசின் குறிக்கோளின் ஒரு பகுதியாகவும் 1983இல் தமிழ்மக்களுக்கு எதிரான இனவெறி வன்செயலின் தொடர்ச்சியாகவுமே விளங்க முடிகிறது.

இத்தகைய இனவழிப்பு செயற்பாடுகள் தொடர்வதனையும் தமிழ்மக்களைத் தொடர்ந்து முஸ்லீம் மக்களும் சிறிலங்காவின் இனவழிப்பு திட்டத்திற்கு பலிக்கடாக் களாக்கப்படும் அபாயம் வெளிப்படுவதையும்



நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் மிகவன்மையாகக் கண்டிப்பதோடு பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்திலும் பங்கேற்கிறது. அதேவேளையில் இலங்கைத்தீவு முழுவதனையும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் குறியீடாக மாற்ற முயலும் சிங்கள பௌத்த தேசிய வன்முறையாளர்களின் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு எதிராகத் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் ஒன்றாக இணைந்து போராடவேண்டிய உன்னதமான தருணம் வந்துவிட்டது என்பதனையும் நாம் விரைந்து சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இலங்கைத் தீவில் 1880ல் இந்திய வர்த்தகர்களுக்கு எதிராக அனகாரிக தருமபாலாவின் தலைமையிலான எதிர்ப்பும்; 1883ஆம் ஆண்டு சிங்கள கிறித்தவர்களுக்கு எதிரான கொட்டகேனா கலவரமும்; 1915இல் சிங்கள முஸ்லீம்

கலவரமும்; 1950இல் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிப்பும்; 1956ஆம் ஆண்டு ஜூலை தமிழர்களுக்கு எதிரான களனிக் கலவரமும்; 1958, 1977 தமிழர்களுக் கெதிரான இனக்கலவரமும்; 1983 தமிழர்களுக்கெதிரான இனவழிப்பு வன்செயலும்; 2009 முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையும் காலத்துக்குக் காலம் சிங்கள பௌத்த மேலாதிக்க வெறி கொண்ட தேசியவாதிகளால் சிறிலங்கா தீவினை முழுமையாக சிங்கள பௌத்த நாடாக்கும் இலக்குடன் முன்னெடுக்கப்பட்டன. முஸ்லீம்களுக்கெதிரான தற்போதைய இனவன்செயல்களும் இந்த வரிசையில்தான் அமைகின்றன.



சிறிலங்கா அரசு கலவரங்களைத் தமது அரசியல் இராணுவ இலக்குகளை அடையும் கருவிகளாகவே வழிநடத்தினர். தமிழர்களுக் கெதிரான 1958, 1977 இனக்கலவரங்களும் 1983 இனவழிப்பு வன்செயல்களும் சிறிலங்கா அரசின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டவை என்பதும் காலத்தால் நிரூபிக்கப்பட்ட உண்மை களாகும். போதி பல சேனாவின் கூட்டத்தைத் தடுக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையின் நிராகரிப்பும் போலிசாரின் செயலற்றமையும் தற்போதைய முஸ்லிம்களுக்கெதிரான இன வன்செயல்களும் சிறிலங்கா அரசின் அனு சரணையுடன் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்கான சான்றுகளாக அமைகின்றன.

இலங்கைத் தீவு சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமல்லாது தமிழ் மொழியைத் தாய் மொழியாக கொண்ட இந்துக்கள், இசுலாமியர்கள், கிறித்தவர்கள், பௌத்தர்கள் ஆகியோரினதும் பாரம்பரியத் தாயக பூமியாகும். தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் சிறிலங்கா தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமக்கென ஆள்புலத்தினையும் வாழ்வாதாரத்தினையும் பண்பாட்டுச் சுவடுகளையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே கொண்டிருந்தார்கள். காலத்துக்குக் காலம் செல்வாக்கு செலுத்திய சமயக்கோட்பாடுகளையும் மார்க்க நம்பிக்கை களையும் உள்வாங்கிய மக்கள் மதங்களால் வேறுபட்டிருந்தும் மொழியாலும் மொழிசார் பண்பாட்டினாலும் ஒன்றுபட்டுச் செழுமை பெற்றனர். மதவெறியும் மேலாதிக்க உணர்வும் என்றுமே அவர்களைப் பிரிக்கவில்லை.

பிரித்தாளும் அரசியல் தந்திரோபாயமும் அதிகாரப் போட்டிகளும் பெரும்பான்மை சனநாயகத்தின் தவிர்க்க முடியாத குறைபாடும் காரணிகளாக அமைந்து இன்று தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தமது பாரம்பரியத் தாயகத்திலும் மர புரிமையான வாழ்விடங்களிலும் திட்டமிட்டுப் பிரிக்கப்பட்டுச் சிதைக்கப்படுகிறார்கள். அவர்களது பண்பாட்டு அடையாளங்களும் வாழ்வாதார வளங்களும் வழிபாட்டு உரிமை களும் மேலாதிக்க இனஉணர்வு கொண்ட பெரும்பான்மையினரின் அதிகாரவெறிக்கு பலியாக்கப்படுகின்றன.

இவற்றினைத் தடுத்து நிறுத்துவதற்கும் தன்னம்பிக்கையும் பொருண்மியத் தற்சார்பும் தன்னாட்சியுரிமையும் கொண்ட வலுவான சமூகத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் தமிழ் மொழிபேசும் மக்கள் என்ற குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டுமென நாடுகடந்த தமிழீழ அரசாங் கத்தின் சார்பாக வேண்டி நிற்கின்றேன். ❖

# ஒற்றுமை நோக்கில் ஒரு விவாதம் :

# மே பதினேழு சிந்தனைக்கு

தோழர் தியாகு



ஐந்தாண்டு முன்பு முள்ளிவாய்க்கால் அவலமாக உச்சங்கண்ட இத்துணைப் பெரிய தோல்விக்கும் இத்துணைக் கொடிய அழிவுகளுக்கும் பிறகுங்கூட தமிழீழ மக்கள் நீதிக்காகவும் விடுதலைக்காகவும் அயராது தொடர்ந்து போராடி வருவது பெருமைக்குரிய செய்தி.

**முக்களப் போராட்டம்**

இந்தப் போராட்டம் புவியியல் நோக்கிலும் அரசியல் நோக்கிலும் மூன்று களங்களில் நடைபெற்று வருகிறது. தமிழீழத் தாயகம், புலம்பெயர் நாடுகள், தமிழ்நாடு ஆகிய இம்மூன்று களங்களிலும் நடந்து வரும் இப் போராட்டங்களின் இறுதிக் குறிக்கோள் தமிழீழ விடுதலைதான் என்றாலும், இந்தக் கட்டத்தில் வடிவங்களிலும் வழிமுறைகளிலும் உடனடிக் குறிக்கோள்களிலும் வேறுபாடு இருக்கவே செய்யும்.

இந்த மூன்று களங்களையும் ஒன்றாக இணைக்க முடியாது என்னும் போதே இவற்றுக்கிடையே ஒருவகை ஒருங்கிணைவு தேவைப்படுகிறது. புலம்பெயர் நாடுகளில் கிடைக்கும் சனநாயக வெளிகளைப் பயன் படுத்திப் பன்னாட்டு அரங்கில் சிங்களப் பேரினவாத அரசைத் தனிமைப்படுத்தும்

முயற்சிகளும் சரி, தமிழகத்தில் இந்திய வல்லாதிக்க அரசுக்கு நெருக்கடி கொடுத்து சிங்கள அரசுக்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு ஆதரவாகவும் மாற்றம் கொண்டுவருவதற்கான முயற்சிகளும் சரி, இறுதி நோக்கில் தமிழீழத் தாயகத்தில் விடுதலை வேண்டி நிற்கும் மக்களுக்குத் துணிவூட்டிப் போராடச் செய்வதற்காகத்தான், இதுவே மூன்று களங்களின் ஒருங்கிணைவு என்பதன் சாரம்.

முதற்களத்தில் ஆயுதப் போராட்டம், இரண்டாம் களத்தில் பொருளியல் ஆதரவு, மூன்றாம் களத்தில் அரசியல் ஆதரவு என்பது போன்ற புரிதல் இப்போது உதவாது. இப்போது மூன்று களங்களிலும் அரசியல் போராட்டங்களே! ஒன்றோடு ஒன்று பின்னிக் கிடக்காமல் ஒன்றுக்கொன்று இசைவுடன் நடைபெற வேண்டிய போராட்டங்கள் இவை. இந்த இசைவை சாதிப்பதற்கு ஈழப் போராட்டத்தின் இன்றைய நிலை பற்றியும் எதிர்கால வாய்ப்புகள் குறித்தும் தெளிவான புரிதல் தேவை.

**ஒற்றுமை தேவை**

முக்களங்களின் இசைவுக்கான முயற்சிகள் ஒருபுறமிருக்க, அந்தந்தக் களத்திலும் போராட்ட ஒற்றுமை தேவைப்படுகிறது. தமிழீழக் களத்திலும் புலம்பெயர் களத்திலும் எதிர்வகையில் சிங்கள அரசின் அடக்குமுறையும் நேர்வகையில் இயக்கங்களின் பொறுப்புவாய்ந்த அணுகுமுறையும் சேர்ந்து, ஒற்றுமையின் திசையில் நல்ல முன்னேற்றத்துக்கு வழிசெய்துள்ளன. சிற்சில சுருதிபேதங்கள் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தத் தேவையில்லை.

ஆனால் தமிழகத்தில்? பதவி அரசியலால் போராட்ட ஒற்றுமை சிதறுவது பழைய கதை. கொள்கைவழி நின்று தன்னளிப்போடு போராடும் இயக்கங்களுக்கிடையே ஒற்றுமை கலைந்து போயிருப்பது கவலைக்குரிய செய்தி. கலைந்து போயுள்ளதே தவிர அடியோடு குலைந்து விட்டதாக நாம் கருதவில்லை. இந்நிலையைச் சீர்செய்து ஒற்றுமையை மீட்டெடுக்க வேண்டும் என்ற முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் இதை எழுதுகிறோம். எவ்வித உள்நோக்கமும் இல்லாமலும் எவ்வித உள்நோக்கமும் கற்பிக்காமலும் கருத்து வேறுபாடுகளைக் கருத்து வேறுபாடுகளாகவே மதித்து விவாதிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

**விவாதப் பொருள்**

எத்தனையோ கருத்துவேறுபாடுகள் இருக்கலாம், இப்போதைய நம் நோக்கத்துக்கு எல்லாவற்றையுமே விவாதித்துக் கொண்டிருக்கத் தேவையில்லை. நிகழ் வேறுபாடுகளுக்கு மையமாக இருக்கிற ஒன்றை முதலில் எடுத்துக் கொள்வோம். அது ஐநா மனித உரிமை மன்றத் தீர்மானம் குறித்தான பார்வை. இதில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதை **ஐநா முன்னே...** (தமிழ்த் தேசம் 2014 சித்திரை) கட்டுரையில் விளக்கியுள்ளோம். இதே பொருள் குறித்து எமக்கு மாறுபட்ட பார்வையுடன் வெளிவந்துள்ளவற்றை விவாதத்துக்கு உள்ளாக்குவதே இங்கு நம் நோக்கம்.

இந்த வரிசையில், மே 17 இயக்கம் வெளியிட்டுள்ள ஒரு குறுநூலில் இடம்பெற்றுள்ள 'அமெரிக்கத் தீர்மானத்தை ஏன் எதிர்க்க வேண்டும்?' என்ற அறிக்கையை முதலில் எடுத்துக் கொள்வோம்.

"தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறிய தமிழகத்தின் அரசியல் தோல்வியிலிருந்து உருவான மே பதினேழு இயக்கம் தமிழீழ விடுதலைக்காகவும் தமிழர் நலன் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்காகவும் போராடி வருகிறது" என்று மேற்கூறிய அறிக்கை கூறுவதை ஏற்றுக் கொள்கிறோம். இந்தப் போராட்டத்தில் ஒத்த கருத்துடைய அமைப்புகளோடு மே பதினேழு ஒருங்கிணைந்து செயல்பட்டிருப்பதும் உண்மை.

**தேசிய ஓர்மை மறுப்பு**

தமிழீழ ஆதரவுப் போராட்டத்தைப் பொறுத்த வரை, மே பதினேழுடன் நாம் கருத்து மாறுபாடு கொள்ள நேரிட்டது 2014 மார்ச்சு ஐநா மனித உரிமை மன்றத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் முன்மொழிந்த தீர்மானம் தொடர்பாகத்தான். அமெரிக்கத் தீர்மானம் தமிழர்களை ஒரு தேசிய இனமாகவே ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மே பதினேழு முன்வைக்கும் அடிப்படைக் குற்றாய்வு.


தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஒப்புக் கொள்வதையும் இதே குற்றாய்வை முன் வைப்பதை அறிவோம். இது மே பதினேழு, ததேபொக ஆகியவற்றின் பார்வை மட்டு மன்று, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கமும் தமிழகத்தின் தமிழீழ ஆதரவு அமைப்புகள் அனைத்தும் இதே பார்வை கொண்டவைதாம். புலம்பெயர் நாடுகளில் இயங்கி வரும் பொறுப்புள்ள தமிழர் அமைப்புகள் எதுவும் அமெரிக்கத் தீர்மானம் தமிழீழ மக்களின் தேசிய இனச் சிக்கலுக்குத் தீர்வு தரும் என்று நம்பவில்லை. விவாதம் இது குறித்தன்று.

**கண்டனம் சரி, காரணம் தவறு**

“தமிழர்கள் ஒரு தேசிய இனமாகவும், அவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலை களுக்கு விசாரணை தேவை என்பதாகவும் இருந்த சர்வதேச விவாதத்தினை, அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தின் மூலம் வேறு திசையில் மாற்றி இருக்கிறார்கள்” என்று மே பதினேழு அறிக்கை சொல்கிறது.

தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஒப்புக் கொண்டு ஐநா மனித உரிமை மன்றம் போன்ற அதிகாரப்பற்றுள்ள பன்னாட்டு அரங்கில் ஒரு சர்வதேச விவாதம் எங்கே எப்போது நடை பெற்றது? 1985 திம்பு பேச்சுவார்த்தையின் போது தமிழீழ அமைப்புகள் அனைத்தும் சேர்ந்து வலியுறுத்திய நான்கு அடிப்படைக் கொள்கைகளில் முதலாவதே ஈழத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான். இந்தக் கொள்கைக்காக நாம் தொடர்ந்து போராடுவோம் என்பது உறுதி. ஆனால் இது வரை இந்தக் கொள்கையின் அடிப்படையில் எந்தப் பன்னாட்டு அரங்கிலும் விவாதம் நடத்தப்பட்டதோ எந்த அரசு சார்பிலும் தீர்மானம் முன்மொழியப்பட்டதோ இல்லை.

தமிழர்களை ஒரு தேசிய இனமாகக் கொண்டு அவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு விசாரணை வேண்டும் என்று ஐநா மனித உரிமை மன்றத்திலோ அது போன்ற வேறு பன்னாட்டு அரங்குகளிலோ ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது போலவும், அதை அமெரிக்கத் தீர்மானம் வேறு திசைக்கு மாற்றி விட்டதாகவும் சொல்வதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை.




தமிழர்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள மறுப்பதும், அவர்களுக்கெதிரான இனக்கொலைக் குற்றத்துக்கு விசாரணை நடத்த மறுப்பதுமான அமெரிக்கத் தீர்மானத்தைக் கண்டிப்பது வேறு. அது வரை சென்று கொண்டிருந்த சரியான திசையை அமெரிக்கத் தீர்மானம்தான் மாற்றி விட்டது என்று அதற்கொரு காரணம் கற்பிப்பது வேறு.

**டப்ளின் – பிறேமன் தீர்ப்பாயங்கள்**

ஒருவேளை நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் டப்ளின், பிறேமன் அமர்வுகளை மனத்திற் கொண்டு மே பதினேழு பேசுகிறதா? நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் டப்ளின் அமர்வு (2010 சனவரி) தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் குற்றங்கள் குறித்து ஆய்வு செய்கிறது என்றாலும், தமிழர்களை ஒரு தேசிய இனமாக அறிந்தேற்பது அல்லது அறிந்தேற்க மறுப்பது குறித்து விவாதிக்கவோ முடிவு கூறவோ இல்லை. அதற்கான தேவையும் அப்போது எழவில்லை.

பிறேமன் தீர்ப்பாயம் தமிழர்கள் மீதான தேசிய இன ஒடுக்குறையின் தொடர்ச்சியாக சிறிலங்கா புரிந்த இனக்கொலைக் குற்றம் குறித்துப் பேசுவது குறிப்பிடத்தக்கது. ஆனால் பிறேமனுக்கு ஐநா மனித உரிமை மன்றமோ அதன் உறுப்பு அரசுகளோ சட்ட மதிப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. பிறேமனின் அற மதிப்பை நம் பரப்புரையில்

நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டும் என்பது சரி. அமெரிக்கா என்றாலும், வேறு அரசு என்றாலும், ஐநா மனித உரிமை மன்றத்தில் முன்மொழியக் கூடிய தீர்மானத்தை பிறேமன் தீர்ப்பைக் காட்டித் குற்றத் திறனாய்வு செய்வதிலும் தவறில்லை.

ஆனால் ஐநா மனித உரிமை மன்றத்தின் வரம்புகளையும் அமெரிக்கா போன்ற வல்லாதிக்க அரசுகளின் நோக்கங்களையும் தெரிந்து வைத்துக் கொண்டு, பிறேமன் தீர்ப்பின் முடிவை அடியொற்றிய தீர்மானத்தை அமெரிக்காவிடமிருந்து ஐநா மனித உரிமை மன்றத்தில் எப்படி எதிர்பார்க்க முடியும்? புதிய அமெரிக்கத் தீர்மானம் குறித்து மேம் பாடு அல்லது முன்னேற்றம் என்ற கணிப்பு பழைய தீர்மானங்களுடன் ஒப்பிட்டுப் பெறப் படுவதுதானே தவிர, டப்ளின் அல்லது பிறேமனுடன் ஒப்பிட்டன்று.

**இருதரப்பு விசாரணை**

மே பதினேழு அறிக்கை "இருதரப்பு விசாரணை என்பதன் நோக்கம் என்ன?" என்று வினாத் தொடுக்கிறது. இருதரப்பு விசாரணை என்பது அமெரிக்கக் கண்டுபிடிப் பன்று. டப்ளின் தீர்ப்பாயம் பன்னாட்டுச் சமுதாயத்துக்கும், நன்கொடையளிக்கும் அரசுகளுக்கும், ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும் அளித்துள்ள முதல் பரிந்துரை இதுதான் (பத்தி 6.2):

"சிறிலங்காவுக்கான ஐநா சிறப்புத் தொடர்பாளர் ஒருவரை அமர்த்தி, சண்டையிட்ட **எல்லாத் தரப்பினரும்** புரிந்த மனித உரிமை மீறல்களுக்கும், மனிதநேயச் சட்ட மீறல்களுக்கும், போர்க் குற்றங்களுக்குமான பொறுப்புகளைப் புலனாய்வு செய்து இனங்கான வேண்டும்." *(அழுத்தம் சேர்க்கப்பட்டது.)*

எல்லாத் தரப்பினரும் என்பதன் பொருள் என்ன? இது சிறிலங்காஅரசை மட்டும்தான் குறிக்குமா? 'இருதரப்பு விசாரணை' என்பதன் வித்து டப்ளின் தீர்ப்பிலேயே இருக்கக் காணலாம். இத்தனைக்கும் டப்ளின் தீர்ப் பாயம் சிறிலங்கா அரசின் குற்றங்கள் குறித்து விசாரித்ததே தவிர, விடுதலைப் புலிகளின் செயல்களை ஆய்விற்கொள்ளவே இல்லை.

தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வுப் பொறியமைவு ஒன்றை அமைக்கும்படி ஐநாவுக்கு முதலில் பரிந்துரை செய்தது மூவல்லுனர் குழு அறிக்கைதான். அது சிறிலங்கா அரசு மீது மட்டுமின்றி, விடுதலைப் புலிகள் மீதும் நம்பும்படியான குற்றச்சாட்டுகள் (credible allegations) இருப்பதாக வகைப்படுத்தி, அவை குறித்துத் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு நடத்தப் பரிந் துரைத்தது. தமிழர் அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் இனக்கொலை, போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள் குறித்துத் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு என்ற கோரிக்கையை வலியுறுத்துவதற்கு மூவல்லுனர் குழு அறிக்கை உரமூட்டியுள்ளது.

இந்தக் கோரிக்கை குறித்து மே பதினேழு என்ன கருதுகிறது? 'தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு வேண்டும், ஆனால் சிறிலங்கா அரசு மீதான குற்றச்சாட்டுகள் குறித்து மட்டுமே அது நடைபெற வேண்டும். விடுதலைப்புலிகள் தொடர்பான குற்றச்சாட்டு களைப் புலனாய்வு செய்யாமலே தள்ளுபடி செய்து விட வேண்டும்' என்று நம்மால் கோர இயலுமா? அல்லது மூவல்லுனர் குழு அறிக்கை விடுதலைப் புலிகளையும் குறை சொல்கிறது என்பதால், அந்த அறிக்கையை அடியோடு மறுதலித்து, அதனடிப்படையிலான புலனாய்வு எதுவும் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? அடிப்படையில் மூவல்லுனர் குழு அறிக்கையை நாம் வர வேற்பதா, இல்லையா?

**சிங்கள அரசும் புலிகளும் ஒன்றல்ல**

நம்மைப் பொறுத்த வரை இனக் கொலை கார சிறிலங்கா அரசின் மீதான குற்றச்சாட்டு களையும், தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக ஆயுதமெடுத்த விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுகளையும் நிகர்ப்படுத்துவதை ஏற்பதற்கில்லை. அதேபோது புலிகளையும் சரி, வேறு எவரையும் சரி, பிழையாப் பெருமை கொண்டவர்களாக நாம் கருதவில்லை, தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு நடந்தால், சிறிலங்கா அரசின் மீறல்களையும் புலிகளின் பிழைகளையும் ஒரே வகைக் குற்றங்கள் என்ற முடிவு ஏதும் வர வாய்ப்பே

இல்லை. அப்படியே வந்தாலும் அதனால் தமிழீழ மக்களின் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டம் சேதப்படாமல் பாதுகாக்கும் அற வலு தமிழர்களுக்கும் உலகெங்கும் உள்ள மனித உரிமை ஆற்றல்களுக்கும் உண்டு என நம்புகிறோம்.

இப்போது புலிகள் மீது சொல்லப்படுவன போன்ற குற்றச்சாட்டுகள் கடந்த காலத்தில் உலகின் வேறு பல விடுதலை இயக்கங்கள் மீதும் சொல்லப்பட்டவைதாம். இவற்றில் சில குற்றங்கள் உண்மையிலேயே நடந்தவைதாம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதும் உண்டு. இதனாலேயே அவை விடுதலை இயக்கங்கள் இல்லை என்று ஆகி விடவில்லை. சான்றாக, பாலத்தீன விடுதலை அமைப்புகளையும், ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரசையுமே குறிப் பிடலாம். ஆப்பிரிக்கத் தேசிய காங்கிரஸ் மீதான இப்படிப்பட்ட சில குற்றச்சாட்டுகளை நெல்சன் மண்டேலாவே ஏற்றுக் கொண் டுள்ளார். வீரத் தெலங்கானா ஆயுதப் போராட்டத்தின்போது இவ்வாறான குற்றங்கள் நிகழ்ந்ததை இந்தியப் பொதுமைக் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளது.

### பன்னாட்டுச் செயல்வழிகள்

தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றம் சொல்வதா? என்று உணர்ச்சி மேலிடக் கேட்டு, வினவல், ஆய்தல், உசாவல் (enquiry, investigation and trial) எனும் பன்னாட்டுச் செயல்வழிகளைத் தவிர்க்கப் பார்ப்பது உலகின் பார்வையில் நம்மை நியாயமற்ற வர்களாகக் காட்டிப் பகைக்கே வலுச்சேர்ப் பதில் போய் முடியும். எந்த விசாரணைக்கும் புலனாய்வுக்கும் எங்களை உட்படுத்திக் கொள்ள நாங்கள் தயார், சிங்களப் பகை தயாரா? என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல் வோம், இதுதான் பகையைத் தனிமைப்படுத்தி, நம் போராட்டத்தை வலுப்படுத்தும்.

இருதரப்பு விசாரணை என்பது அமெரிக்கத் தீர்மானத்தில் புதிதாக வந்து விழுந்து விட வில்லை. மூவல்லுனர் குழு அறிக்கை மட்டு மன்று, மனித உரிமை ஆணையரின் அறிக்கை, சேனல் நான்கு ஆவணப் படங்கள் என்று நடுநிலை ஆய்வுகள் பலவும் விடுதலைப் புலிகளும் பன்னாட்டுச் சட்டங்களை மீறிக் குற்றம் புரிந்திருப்பதாகச் சொல்லவே செய் கின்றன. எனவே இந்தக் குற்றச்சாட்டுகளைக் கைகட்டி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால் இவற்றின் மீதான விசாரணையோ புலனாய்வோ கூடாது என்று வாதிடுவது நம் நியாயத்தை வலுக்குன்றச் செய்து சிங்களப் பகை தப்புவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதாகி விடும் என்கிறோம்.

### இந்திய, சிங்கள அணுகுமுறை

இருதரப்பு விசாரணை என்பது தமிழ்த் தரப்புக்குப் பாதகம் செய்வதும் சிங்களத் தரப்புக்கு நன்மை செய்வதும் ஆகும் என்றால், சிறிலங்காவும் இந்தியாவும் அதை எதிர்க்க வேண்டியதில்லையே? நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலகத் தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனேடியத் தமிழர் பேரவை போன்ற தமிழர் அமைப்புகள் அதை ஏற்க வேண்டியதும் இல்லையே? புலிகள் புரிந்த போர்க் குற்றங்கள் குறித்து தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு தேவை என்று சிறிலங்காவோ இந்தியாவோ ஒப்புக்கும் கோரிக்கை வைக்கவில்லையே, ஏன்? அப்படி ஒரு புலனாய்வு நடந்தால் தமிழர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பைக் காட்டிலும்... இந்திய உடந்தையோடு சிறிலங்கா செய்த இனக்கொலை, போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் அம்பலப்பட்டு விடவே கூடுதல் வாய்ப்புள்ளது என்ற அச்சம்தானே காரணம்?

எவர் எப்படி விசாரித்தாலும் சரி, புலிகள் சிங்களர்களை இனக்கொலை செய்தார்கள் என்று யாராலும் விரல் நீட்டிச் சொல்ல முடியுமா? எனவே புலிகளின் ஆட்சியிலிருந்து சிங்களர்களுக்கு விடுதலை வேண்டும் என்று கேட்க முடியுமா? மாறாக சிங்கள அரசு புரிந்த இனக்கொலை, போர்க்குற்றங்கள், மானிட விரோதக் குற்றங்களுக்கு ஈடாகத் தமிழர்களுக்கு ஈடுசெய் நீதி வேண்டும், பாதுகாப்பு வேண்டும், பொது வாக்கெடுப்பு வேண்டும் என்றெல்லாம் கேட்க முடியுமே! கேட்டதும் கிடைக்காதுதான், ஆனால் அவற்றுக்கான மக்கள் போராட் டத்துக்கு வலுச் சேர்க்க முடியுமே!

### சட்ட நுணுக்கங்களும் அரசியல் விளைவுகளும்

இருதரப்பு விசாரணையால் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குப் பாதிப்பு இருக் காது என்றும், தமிழர் தரப்புக்கே பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும், விசாரணை முடிய 15, 20 ஆண்டுகள் வரை ஆகலாம் என்றும் மே பதினேழு அறிக்கை அச்சம் தெரிவிக்கிறது. இப்படிச் சொல்வதற்கான சட்ட நுணுக்கங்கள் சரி என்றே வைத்துக் கொண்டாலும், அவற்றைக் காட்டிலும் இந்த விசாரணையின் அரசியல் விளைவுகள்தாம் முக்கியமானவை எனக் கருதுகிறோம். 2009 தொடங்கி நாளது வரையிலான ஐநா மனித உரிமை மன்ற நடடிக்கைகள், மூவல்லுனர் குழு அறிக்கை, ஆணையர் அறிக்கை, தீர்மானங்கள் மீதான விவாதங்கள், வாக்கெடுப்புகள்... இவை யாவும் தமிழீழக் களத்தில் போராட்ட வெளியை உருவாக்கவும் விரிவாக்கவும் துணை செய் துள்ளனவா, இல்லையா? உலக அளவிலும் தமிழக அளவிலும் தமிழீழ ஆதரவுப் போராட் டங்களுக்குத் துணை செய்துள்ளனவா இல்லையா?

### எது போராட்டப் பாதை?

இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது தற்சார்பான பன்னாட்டுப் புலனாய் வுக்கு வழிசெய்யும் ஒரு தீர்மானம் இருதரப்பு விசாரணை என்ற ஒரு காரணத்தாலேயே ‘தமிழீழ விடுதலையை நோக்கி நகருகின்ற நமது போராட்டப் பாதையைப் பின்னுக்குத் தள்ளி’ விடும் என்று மே பதினேழு அச்சப்படுவதற்கு அடிப்படை ஏதுமில்லை. தமிழீழ விடுதலையை நோக்கி நகருகின்ற போராட்டப் பாதை என்று சொல்வதை நீங்களே விண்டுரைக்க முற் பட்டால் உங்கள் தன்முரண்பாடு தானாக வெளிப்படும். நீங்கள் பரிந்துரைக்கும் போராட்டப் பாதை என்பது அறிந்தோ அறியாமலோ பன்னாட்டு அரங்கில் நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்வதில் போய் முடியும்.

### அமெரிக்க மயக்கமில்லை

அமெரிக்கத் தீர்மானத்தைக் குற்றாய்வு செய்வதில் நமக்கு மாற்றுக் கருத்தில்லை. இதை நாம் மட்டுமன்று, பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழி செய்கிற அளவில் அதை வரவேற்றுள்ள உலகத் தமிழர் அமைப்புகளும் தெளிவுபடுத்தியுள்ளன. அமெரிக்க வல்லரசு குறித்து ஒருசில தமிழர்களுக்கு மயக்கம் இருக்கலாம், எமக்கு இல்லவே இல்லை. ஆனால் அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்க்கும் மிகையார்வத்தில் ‘அமெரிக்கா மட்டும் இருதரப்பினரையும் விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை வைப்பதை விமர்சிக்காமல் எவ்வாறு கள்ள மௌனம் சாதிக்க முடியும்?’ என்று மே பதினேழு அறிக்கை கேட்கிறது.

‘இது வரை எந்த ஒரு சர்வதேச அறிக்கை களிலும், சார்லஸ் பெட்ரி, நோர்வே, ஐநா வல்லுநர் குழு, மனித உரிமைக்குழுக்கள் புலிகளுக்கு எதிரான ஆதாரங்களை முன் வைக்காத பொழுது...’ என்ற பீடிகையோடு மேற்சொன்ன வினா தொடுக்கப்படுகிறது.

### சர்வதேச அறிக்கைகளில் புலிகள்

‘எந்த ஒரு சர்வதேச அறிக்கையிலும்’ புலிகளுக்கு எதிரான ஆதாரங்கள் முன் வைக்கப்படவில்லையா? மூவல்லுனர் குழு அறிக்கை சொல்வது என்ன? போரின் இறுதிக் கட்டங்களில் புலிப் படை பொதுமக்களைப் பிணைக்கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டது, படைக்குக் கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபட்டது போன்ற கடுமையான குற்றச் சாட்டுகளை ‘நம்பும்படியான குற்றச்சாட்டுகள்’ என்ற வகையில் அது குறிப்பிடுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை இறுதியாக மெய்ப்பிக்கவோ பொய்ப்பிக்கவோதான் தற்சார்பான பன்னாட்டுப் புலனாய்வு தேவைப்படுகிறது.

சிங்கள அரசின் கொடுங்குற்றங்களை உலகறியச் செய்ததன் மூலம் தமிழினத்துக்கு அருந்தொண்டாற்றியுள்ள சேனல் நான்கு – கலம் மக்ரே புலிகள் மீதும் சில குற்றச் சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார். பன்னாட்டுப் பொதுமன்னிப்புக் கழகம் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லி ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளது. சிங்கள அரசு ‘தமிழ்ப் பெண் புலி’ என்று வர்ணிக்கின்ற நவநீதம் பிள்ளையும் புலிகள் மீது சில குற்றச்

சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்து வாதுரைக்கவோ, காரண விளக்கம் சொல்லவோ, ஒப்புக்கொண்டு சரி செய்ய முயலவோ நமக்கு முழு உரிமை உண்டு. ஆனால் யாருமே சொல்லாததை அமெரிக்கத் தீர்மானம் இட்டுக்கட்டிக் கிளப்பி விடுகிறது என்று சொல்வது உண்மைக்கு மாறானது.

**பெட்ரி அறிக்கையும்தான்**

மே பதினேழு அறிக்கை சார்லஸ் பெட்ரியையும் போகிறபோக்கில் தனக்கு சாட்சி ஆக்கிக் கொள்கிறது. பெட்ரியின் ஐநா உள்ளக ஆய்வறிக்கையை மே பதினேழு தோழர்கள் மீண்டும் ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டுகிறோம். இந்த அறிக்கை ஐநா நடவடிக்கைகள் தொடர்பானதே என்றாலும், புலிகளைப் பற்றிய குற்றச்சாட்டுகளும் இல்லாமலில்லை. சான்றாக ஒன்றைக் குறிப்பிடுவதென்றால், "அரசுப் படைகள் தொடர்ந்து இராணுவத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த போதே, பொதுமக்கள் சண்டைப் பகுதியிலிருந்து வெளியேற விடுதலைப் புலிகள் அனுமதிக்க மறுத்து, செயலளவில் அவர்களைக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்டனர்." இது பெட்ரி அறிக்கையின் பத்தி 19இல் காணப்படும் குற்றச்சாட்டு.

**எதிர்ப்பது எப்படி?**

அமெரிக்கத் தீர்மானத்தை ஏன் எதிர்க்க வேண்டும்? என்று வினாத் தொடுத்து விடையிறுக்க முற்படும் மே பதினேழு அறிக்கை... அமெரிக்கத் தீர்மானத்தை எப்படி எதிர்க்க வேண்டும்? என்ற வினாவிற்கும் விடை தேடியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அமெரிக்கத் தீர்மானத்தைக் கிழித்தெறிவோம்! அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிடுவோம்! என்ற முழக்கங்கள் மட்டுமே எதிர்ப்பாகி விடுமா? அயோக்கியத்தனமான அமெரிக்கத் தீர்மானத்தைத் தோற்கடிக்க வேண்டாமா? தோற்கடிக்கும்படி ஐநா மனித உரிமை மன்ற உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தீர்களா? இந்தியாவிடம் அப்படிக் கோரிக்கை வைத்தீர்களா?

**இந்தியாவிடம் கோரிக்கை என்ன?**

நாம் இந்தியாவில் இருந்து கொண்டு போராடுவதாலும், இந்தச் சிக்கலில் இந்தியாவின் பங்கு முக்கியமானது என்பதாலும், இந்தியாவிடம் நம் கோரிக்கை என்ன என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். அமெரிக்கா தீர்மானம் கொண்டுவருவது உறுதியான பின் அதற்கு எதிராக வாக்களிக்கும்படி இந்தியாவைக் கோருவதுதான் உங்கள் நிலைப்பாட்டிலிருந்து எடுக்க வேண்டிய தருக்கவழி முடிவாக இருக்க முடியும்.

அமெரிக்கத் தீர்மானம் – அதிலடங்கிய எல்லாக் குறைநிறைகளோடும் நிறைவேறியதைத் தமிழர்களுக்கு ஏற்பட்ட பெருந்தோல்வியாகவும், சிங்களத்துக்குக் கிடைத்த பெருவெற்றியாகவும் கருதுகின்றீர்களா? இத்தீர்மானத்தைத் தடுக்க முயன்று, இறுதியில் வாக்கெடுப்பிலிருந்து விலகி நின்ற இந்தியாவின் நிலைப்பாடு குறித்து உங்கள் பார்வை என்ன? இந்தக் கேள்விகளைக் கேட்பது உங்கள் பிழையை உணர்த்தும் நோக்கிலும், அதன் வழி கருத்தொற்றுமைக்கும் செயலொற்றுமைக்கும் வழிகோல வேண்டும் என்பதற்காகவும்தானே தவிர, உள்நோக்கம் கற்பித்து உங்கள் பார்வையைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்ல.

**வெற்றியும் விழிப்பும்**

ஆக, அமெரிக்கத் தீர்மானம் ஈழத் தமிழர்களை ஒரு தேசிய இனமாக அறிந்தேற்கவில்லை என்பதையோ அது இருதரப்பு விசாரணையைக் கோருகிறது என்பதையோ மட்டும் வைத்து, செயலளவில் பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழிகோலும் அதன் பயன்பாட்டைப் புறந்தள்ளி விட முடியாது. இது அமெரிக்க அரசோ பிரித்தானிய அரசோ பிற அரசுகளோ தமிழ்மக்களுக்கு இடும் பிச்சை அன்று.

இது ஈடுசெய் நீதிக்காக உலக அளவில் தமிழர்களும் மனித உரிமை ஆற்றல்களும் நடத்தியுள்ள ஐந்தாண்டுக் காலப் போராட்டத்துக்குக் கிடைத்திருக்கும் வெற்றி. இந்த வெற்றியை முன்னெடுத்துச் செல்ல... தொடர்ந்து விழித்திருந்து போராட வேண்டிய கடமை நமக்குண்டு. அயர்ந்தால் ஆதிக்க

அரசுகள் நம்மை ஏமாற்றிவிடும் ஆபத்துண்டு.

**பிறேமன் தீர்ப்பு**

தமிழீழ மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கான போராட்டம் அதிகாரப்பற்றுள்ள பன்னாட்டு நிறுவனங்களை மட்டும் சார்ந்து நிற்கத் தேவையில்லை. இன்றைய உலகில் அரசுகள் மட்டுமே ஆற்றல்கள் அல்ல. நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் போன்ற அறவழி நிறுவனங்களின் வழிமுறைகளும் நமக்குத் தேவை. மூவல்லுனர் அறிக்கை வருவதற்கு முன்பே டப்ளின் தீர்ப்பு நம் முயற்சிகளுக்குத் துணை செய்தது. அதே போல் பிறேமன் தீர்ப்பும் மதிப்புமிக்க ஒன்று. நடந்தது இனக்கொலை என்று வரையறுத்ததிலும் அதில் வல்லரசுகளின் பங்கை நிறுவியதிலும் அதன் பங்கு முகாமையானது. பிறேமனில் மே பதினேழு எடுத்த சீரிய முயற்சியைப் பாராட்டுகின்றோம்.

பிறேமன் தீர்ப்பை ஐநா மனித உரிமை மன்றப் புலனாய்வு பின்னுக்கிழுத்து விடும் என்பது ஒரு மேற்போக்கான பார்வை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இது வெறும் குற்றவியல் நீதிக்கான போராட்டமன்று, அதற்கும் மேலே இது அரசியல் நீதிக்கான போராட்டம்.

பிறேமனைப் பெரிதாகக் கண்டுகொள்ளும் தேவை இராசபட்சனுக்கு எழவில்லை. ஆனால் ஐநா புலனாய்வுக்கு எடுத்த எடுப்பிலேயே முட்டுக்கட்டை போடத் தொடங்கி விட்டது சிங்களம். உலகம் இதற்கு எதிர்வினை ஆற்றியாக வேண்டும்.

**சிங்களத்தைத் தனிமைப்படுத்துவோம்!**

புறக்கணிப்பு – முதல்நீக்கம் – தடைகள் (BDS = Boycott- Divestment- Sanctions) என்ற வழிகளில் சிறிலங்காவை நெருக்கும்படி உலகையும் இந்தியாவையும் வலியுறுத்த வேண்டும். இதனால் சிங்களத்தை மென்மேலும் தனிமைப்படுத்த இயலும். இதற்கிணையாகத் தமிழினம் மென்மேலும் ஊக்கம் பெற்றுப் போராடும். அந்தப் போராட்டத்தில் தமிழகம் தனக்குரிய பங்கினை ஆற்றுவதற்கு நம்மிடையே — போராடும் இயக்கங்களிடையே — கொள்கை வழிப்பட்டஒற்றுமை தேவை. ஒன்றுபடுவதற்காகவே ஒன்றுபடுவது அன்று, போராடுவதற்காக ஒன்றுபடுவதுதான் புரட்சிகர ஒற்றுமை. அத்தகைய ஒற்றுமைக்கு உரிமையுடன் அழைக்கிறோம்! ❖

(தமிழீழ ஆதரவு இயக்கங்களிடையே ஒற்றுமை நோக்கில் இந்த விவாதத்தைத் தொடங்கியுள்ளோம். இயக்கங்களும் தலைவர்களும் மட்டுமல்ல, வாசகர்களும் எழுதலாம் – இயன்ற வரை சுருக்கமாக. – ஆசிரியர்.)

## திங்களொரு பிள்ளைப்பேறு!




மறுபிறப்பெடுத்துள்ள 'தமிழ்த் தேசம்' தவறாமல் திங்கள் தோறும் வெளிவந்தாக வேண்டும் என்பது தமிழன்னை எமக்கிட்டுள்ள அன்புக் கட்டளை.

ஏடின்றேல் இயக்கம் இல்லை என்ற உறுதியோடு இயக்க உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் முழு முயற்சி எடுத்தால் மட்டுமே இந்தக் கட்டளையை எம்மால் நிறைவேற்ற முடியும்.

தமிழ் கூறும் நல்லுலகெங்கும் 'தமிழ்த் தேசம்' சென்றடைய வேண்டும். புலம்பெயர் தமிழ் இளையோருக்காகவும், அவர்தம் அயலக நண்பர்களுக்காகவும் இதழ்தோறும் சில பக்கங்கள் ஆங்கிலத்திலும் தருகிறோம். ஒவ்வோரிடத்திலும் 'தமிழ்த் தேசம்' இதழ் பரப்பலில் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள். இதழ் விற்பனை, ஆண்டுக் கட்டணம், வாழ்நாள் கட்டணம், நன்கொடை என்று இயன்ற வகையெல்லாம் உதவ வேண்டுகிறோம்.

தோழர் தியாகு

# குற்றப்பரம்பரைச் சட்டத்தின் கொடுங்கோலுக்கடங்காத பெருங்காமநல்லூர்

**2013 ஏப்ரல் 3ஆம் நாள் உசிலம்பட்டியில் நடைபெற்ற பெருங்காமநல்லூர் ஈகியர் வீரவணக்கப் பொதுக்கூட்டத்தில் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச்செயலாளர் தோழர் தியாகு ஆற்றிய உரை**

தோழர் முகில்நிலவன் அவர்கள் குற்றப் பரம்பரைச் சட்ட வரலாற்றைப் பல கட்டுரைகளாகத் தொகுத்து **குற்றப் பரம்பரை அரசியல்** என்ற செறிவான நூல்வடிவில் நமக்குத் தந்துள்ளார். அதேபோல் தோழர் சுந்தரவந்தியத் தேவன் எழுதிய **பிறமலைக் கள்ளர் வாழ்வும் வரலாறும்** என்ற நூலும் இவ்வரலாற்றைப் பயில்வதற்கும், மக்களிடம் முன்னெடுத்து செல்வதற்குமான ஆர்வத்தை எமக்களித்தது.

வரலாறு என்றால் வந்த வழி என்று பொருள். வந்த வழி தெரியாதவர்களுக்குப் போகும் வழி புரியாது. வரலாற்றை நாம் நினைவு கூர்வதற்குக் காரணம் கடந்து போன ஈகங்களை எண்ணிக் கண்ணீர் விடுவதற்காகவும், நிகழ்த்தி விட்ட வீரங்களைச் சொல்லிப் பெருமை பேசுவதற்காகவும் அல்ல. வருங்காலத்திற்கு வழி சமைப்பதற்கு அந்த ஈகமும் வீரமும் வழிகாட்ட வேண்டும் என்பதற்காகத்தான்.

பெருங்காமநல்லூரின் ஈகம் இன்றைக்கும் பொருத்தப்பாடு உடையது. இன்றைக்கும் அத்தகைய வீரம் தமிழர்களுக்குத் தேவைப்படுகிறது என்பதால் அந்த ஈகியரை நாம் வணங்குகிறோம். இன்றைக்கும் தமிழ்ப் பெண்கள் மாயக்காள் போன்ற வீரப் பெண்களாக இருக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். அப்படிப்பட்ட வீரப் பெண்களை நாம் வணங்குகிறோம்.

நண்பர்களே! பெருங்காமநல்லூரில் 1920 ஏப்பிரல் 2ஆம் நாள் 93 ஆண்டு முன்பு இதே நாளில் – சுட்டுக் கொல்லப்பட்ட 16 பேரும் – நடையநேரியில் இருந்து வாழ்க்கைப்பட்டு வந்து பெருங்காமநல்லூரில் வதைபட்டு, சுடுபட்டு வீழ்ந்த மாயக்காள் உள்ளிட்ட பதினாறு பேரும் – பிறமலைக் கள்ளர்கள். இவர்கள் ஒரு சாதியைச் சேர்ந்தவர்கள் என்பதால் இது ஒரு சாதிப் போராட்டம் அல்ல. 1968 திசம்பர் 25ஆம் நாள் கீழவெண்மணியிலே 44 பேர் உயிரோடு கொளுத்தப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் கூட சாதி இந்து இல்லை. அனைவரும் சேரி மக்கள். அதனால் அது ஒரு சாதிப் போராட்டம் ஆகி விடாது. எங்களுக்குப் பெருங்காமநல்லூரும் வெண்மணியும் தமிழ் இனத்தின் இரண்டு ஈகக் களங்கள், வீரக்களங்கள் என்று பார்க்கிறோம். தமிழ்த் தேசியம் என்பது ஒடுக்குண்ட மக்களின் போராட்ட ஒற்றுமையைச் சார்ந்திருக்கிறதே தவிர அவர்களுக்கு இடையேயான மோதலைச் சார்ந்திருக்கவில்லை. அந்த முறையில் தமிழ்த் தேசியத்திற்கான ஒற்றுமையைக் கட்டுவதற்கு பெருங்காமநல்லூரின் ஈகமும் தேவை, வெண் மணியின் ஈகமும் தேவை.

நண்பர்களே! ரேகைச் சட்டத்திற்கு எதிரான போராட்டத்தை நடத்திய அந்த வீரமிக்க தமிழர்களை நாம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டத்திலே மட்டுமல்ல, உலகெங்கிலும் உவமை காட்டிப் போற்ற முடியும். நம்முடைய தமிழ்ச் சமூகத்தைப் பீடித்திருக்கின்ற இரண்டு பெரிய சங்கிலிகளில் ஒன்று காலனி ஆதிக்கம். மற்றொன்று வர்ண சாதி ஆதிக்கம். காலனி ஆதிக்கத்திற்கும் வர்ண சாதி ஆதிக்கத்திற்கும் பொதுவான ஒரு தன்மை இருக்கிறது. அது மனிதர்களைப் பிறப்பால் வேறுபடுத்திப் பார்ப்பது. குறிப்பிட்ட சிலரைப் பிறப்பால் குற்றவாளிகளாகப் பார்ப்பது. இட்லர் ஜிப்சிகளைப் பிறப்பால் குற்றவாளிகளாகப் பார்த்தார். யூதர்களைப் பிறப்பால் குற்றவாளி களாகப் பார்த்தார். அதனால்தான் இரண்டாம்

**உரைத் தொகுப்பு: இருகூர் தேவராசு**

உலகப் போர் தொடங்குகின்ற பொழுது ஐரோப்பாவில் 90 இலட்சம் யூதர்கள் இருந்தார்கள். போர் முடிகின்ற பொழுது வெறும் 30 இலட்சம் யூதர்கள்தான் மிச்சப்பட்டார்கள். 60 இலட்சம் யூதர்களைக் கொன்று குவித்து விட்டான். இன்றைக்கு வல்லமை பொருந்திய அமெரிக்க வல்லாதிக்கம் ஒருவர் இசுலாமியர் என்றாலே அவரைப் பயங்கரவாதி என்று ஐயுறுகிறது. முசுலீம்களைப் பிறப்பால் குற்றவாளிகளாகப் பார்க்கிறது.

ஒரு காலத்தில் தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்கள் கறுப்பின மக்களைப் பிறப்பால் குற்றவாளிகளாகப் பார்த்தார்கள். பெருங்காம நல்லூருக்கு இணையான ஒரு வீரமிக்க வரலாற்றைத் தென்னாப்பிரிக்கக் கறுப்பின மக்கள் படைத்தார்கள். அங்கேயும் இதே போன்று கைரேகைச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது. ஒரு இனக் குழுவிற்கு எதிராக மட்டுமல்ல, வெள்ளையர் அல்லாத அனைவருக்கும் எதிராகப் பயன்படுத்தப்பட்டது. இதை எதிர்த்துத்தான் காந்தியார் இங்கிருந்து சென்ற மக்களைத் திரட்டிப் போராடினார். அந்தப் போராட்டத்திலே ஒரு முக்கியத் தன்மை உண்டு. என்னவென்றால், அந்தப் போராட்டத் திலே தமிழர்கள் இருந்தார்கள், குசராத்தியர்கள் இருந்தார்கள், இந்திக்காரர்கள் இருந்தார்கள், பத்தானியர்கள் இருந்தார்கள். ஆனால் அந்தப் போராட்டத்தின் வலிமைமிக்க ஆற்றல் தமிழர் கள்தான். காந்தியார் அந்தப் போராட்டத்திலே மிகப் பெரிய ஈகப் பெண்ணாகக் குறிப்பிட்டது யாரைத் தெரியுமா? தில்லையாடி வள்ளி யம்மையைத்தான். அவர் அந்தப் போராட்டத்திலே சிறைப்பட்டுப் பின் உயிர் நீத்தவர்.

ஆனால் காந்தியார் செல்வதற்கு முன்பு – இத்தகைய அறப் போராட்டங்கள், சத்தியா கிரகங்கள் நடப்பதற்கு முன்பு – தென்னாப்பிரிக்க மக்கள் பழங்குடிகளாகப் பிரிந்து இருந்தார்கள். வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து ஒவ்வொரு பழங்குடியும் போரிட்டது, பிரிந்து கிடக்கின்ற சமூகத்தை அடிமைப்படுத்துவது எளிது என்றாலும் அவர்கள் தனிதனி இனக்குழுக்களாக அணிசேர்ந்து போராடினார்கள்.

கறுப்பின மக்கள் பிரிட்டனின் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் எதிர்த்துக் களங்கண்டு வெற்றி பெற்றது ஒரு புகழார்ந்த வரலாறு. 1879இல் பிரெடெரிக் எங்கெல்சுக்குச் செய்தி ஒன்று கிடைக்கிறது. இன்றைக்கு இருப்பது போல் இணையம், தொலைகாட்சி வசதிகளோ நவீனத் தொடர்பு வசதிகளோ அதிகம் இல்லாத காலம் அது. சூலு இன மக்கள் தங்கள் மன்னர், அதாவது குலத்தலைவர் செஸ்ட்வாயோவின் தலைமையில் கரந்தடி முறையில் போரிட்டார்கள். வெறும் வேல்கம்பும் ஈட்டியும் வில் அம்பும்தான் அவர்களிடம் இருந்தது. இசாந்திலவானா மலையில் பிரித்தானியப் படையை – பீரங்கிகள், துப்பாக்கிகளோடு வந்த 2000 பேர் கொண்ட அந்தப் படையை – சூலு வீரர்கள் சுற்றி வளைத்துத் தோற்கடித்தார்கள். மலையடியில் வெள்ளைப் படை, உச்சியில் கறுப்புப் படை. கறுப்பர்கள் அணியணியாகப் பாய்ந்து வந்தார்கள். ஓரணி வீழ்த்தப்பட்டால் உடனே அடுத்த அணி வரும். இப்படி வரிசையாக வந்து நெருங்கிநின்று. வேல் கம்புகளாலும், ஈட்டிகளாலும் வெள்ளைப் படையினை வீழ்த்தி வெற்றி கண்டார்கள். அந்தப் போர்க் களத்திலே அவர்கள் வெற்றி பெற்ற செய்தியை லண்டனிலிருந்த ஒரு வெள்ளைக்காரர் கேள்விப்பட்டு மகிழ்ந்து கொண்டாடினார். அவர்தான் பிரெடெரிக் எங்கெல்சு.

ஆனால் அடுத்து வந்த போர்க்களங்களில் வெள்ளையர்கள் அவர்களை வீழ்த்தி அடிமைப் படுத்தி விட்டார்கள். காலப்போக்கில் பழங்குடி களாக இருந்த மக்கள் தென்னாப்பிரிக்கத் தேசிய இனமாக உருப்பெற்றார்கள். ஆப்பிரிக்கத் தேசியக் காங்கிரஸ் மலர்ந்தது. ஆப்பிரிக்கர்கள் மட்டு மல்லர். இந்தியர்கள், கலப்பினத்தவர்கள், சன நாயக உள்ளங்கொண்ட வெள்ளையர்கள் எல் லோரையும் ஒன்றிணைத்து தென்ஆப்பிரிக்கத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெற்றி கண்டார்கள்.

அரசியல் வகையில் ஒப்பிட்டுச் சொன்னால் இசாந்திலவானாவில் சூலுக்கள் போராடியதைப் போன்றது பெருங்காமநல்லூரில் பிறமலைக் கள்ளர்கள் நடத்திய போராட்டம். கொடிய குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்து அவர்கள் கலகம் செய்தார்கள் எனலாம். கள்ள நாட்டு ஊர்ப் பெரியவர்கள் கூடி, ரேகை வைக்கக் கூடாது என்றும், இச்சட்டத்தின் கீழ் தங்களைப் பதிவு செய்வதைக் கடுமையாக எதிர்ப்பது என்றும் முடிவு செய்தனர். அதற்காக ரேகை எதிர்ப்புக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. ரேகைப் பதிவிற்கு யாரும் ஒப்புக்கொள்ளக் கூடாது என்று ஊர் ஊருக்கு ஓலை விட்டார்கள். இந்தச் சட்டத்தை நிறுத்தி வைக்குமாறு மாவட்ட ஆட்சியருக்கு மனு எழுதி அனுப்பி வைத்தனர்.

ஆனால் 1920 ஏப்ரல் 2ஆம் நாள் இரவே சிந்துபட்டி காவல் நிலையத்தில் சிறப்புக் காவல்

படை வந்து குவிந்து விட்டது. ஏப்ரல் 3ஆம் நாள் அதிகாலையில் போலீஸ் படை ஊருக்குள் நுழைந்தது. வட்டாட்சியரும் நீதிபதியும் போலீஸ் அதிகாரிகளும் வந்திருந்தார்கள். மக்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தது. ஏறத்தாழ 3000க்கும் மேற்பட்ட மக்கள் கூட்டம். எங்கும் ஒரே ஆரவாரம். கட்டுக்கடங்காத நிலை. அதிகாரிகள் கலக்கம் அடைந்தனர். கல், கம்பு, கத்தி, ஈட்டி, வில் அம்பு, வளைதடி போன்ற ஆயுதங்களோடு மக்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது. அதிகாரிகள் ரேகைப் பதிவிற்கு ஒத்துழைப்புக் கேட்டனர். அதனை ஏற்காத மக்கள் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

ஆத்திரம் அடைந்த அதிகாரிகள் மக்களைத் தாக்க ஆரம்பித்தனர். கூட்டத்திலே விட்டி பெருமாள்தேவன் போலீஸ் அதிகாரிகளை நோக்கி, “அடாத காரியம் செய்து மக்களை அடிமைப்படுத்த வந்த பயல்களே, மரியாதையா ஊரை விட்டு போய் விடுங்கள், இல்லையென்றால் ஒங்களை வெட்டி காத்தாண்டம்மனுக்கு பலி கொடுத்து விடுவோம்” என்று எச்சரித்தார்.

இரண்டாவதாக, காமன்வெல்த் தொடர்பான எமது கோரிக்கையின் முதற்பயனே அது ஏற்படுத்தும் உளவியல் தாக்கம்தான். எமது கோரிக்கையின் எந்தக் கூறு வெற்றி பெற்றாலும் அது சிங்களர்களின் பேரினவாதச் சிந்தனைக்கு அடி கொடுக்கும். இந்திய வல்லாதிக்க அரசுக்கும் சிங்களப் பேரினவாத அரசுக்குமான முரண்பாட்டை வளர்த்து விடும். மறுபுறம் ஈழத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஊக்கமளிக்கும். முதற்கூறு வென்றால், அதாவது சிறிலங்கா அரசு காமன்வெல்த்திலிருந்தே நீக்கபட்டால் பெரும்பயன், இரண்டாவது கூறு வென்றால், அதாவது காமன்வெல்த் சந்திப்பு இலங்கையில் நடைபெறா விட்டால் இடைப்பயன், மூன்றாவது கூறு வென்றால், அதாவது சந்திப்பு அங்கு நடந்து இந்தியா புறக்கணித்தால் சிறு பயன், தலைமை அமைச்சர் மட்டும் போகா விட்டால் சிறுமப் பயன். ஆனால் எப்படியும் பயன் உண்டு.

இலங்கையை காமன்வெல்த்திலிருந்து நீக்குவது, காமன்வெல்த் சந்திப்பை இலங்கையில் நடத்த விடாமல் செய்வது, மீறி நடந்தால் இந்தியாவோ பிற அரசுகளோ கலந்து கொள்ளாமல் தடுப்பது, எதுவும் முடியாத போது இந்தியத் தலைமை அமைச்சரையாவது போக விடாமற்செய்வது... இந்தக் கோரிக்கைக் கூறுகள் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. இவற்றில் ஒன்றுக்கு அழுத்தம் தரும் உத்தி மற்றவற்றைக் கைவிடுவதாகாது. இவற்றில் ஒன்றைச் சாதித்தாலும் மற்றவற்றைச் சாதிப்பதற்குத் துணையாகுமே தவிர தடை ஆகாது. ஏனென்றால் இந்தக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுமே விளைவளவில் ஒரே திசை வழிப்பட்டவை. காமன்வெல்த்தை விட்டு வெளியேற்றக் கோரும் பெருமக் கோரிக்கையும், இந்தியத் தலைமை அமைச்சர் கலந்து கொள்ளக் கூடாது என்னும் சிறுமக் கோரிக்கையும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்லவே அல்ல. ஒரு போராட்டப் போக்கில் இவற்றில் எதற்கு எப்போது எவ்வளவு அழுத்தம் கொடுப்பது என்ற உத்தி "வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல்" என்ற கட்டளைக்குட்பட்டது. ஒரு கோரிக்கையின் சொற்பொருளை விடவும் விளைபொருள் முகாமையானது என்பதை மறக்கலாகாது.

இந்தியத் தலைமை அமைச்சர் போகக் கூடாது என்பது அற்ப சொற்பக் கோரிக்கையன்று என்பதற்குச் சான்றாகத் தமிழகச் சட்டப்பேரவையின் ஒருமனதான தீர்மானம் குறித்து தில்லிக்கான சிங்களத் தூதர் வெளிப்படுத்திய எதிர்வினையைக் குறிப்பிடலாம். அதே போல் காங்கிரஸ் தலைமையிலும் அமைச்சர்களிடையிலும் அது கிளப்பி விட்டுள்ள பூசலையும் எடுத்துக் காட்டலாம். இலங்கையை காமன்வெல்த்திலிருந்து நீக்க வேண்டும் என்றும் சட்டப் பேரவை கோரியிருந்தாலும், தலைமை அமைச்சர் போகக் கூடாது என்ற சிறுமக் கோரிக்கையே இந்திய, சிங்கள ஆட்சியாளர்களை இந்த அளவுக்கு அலறச் செய்திருக்கக் காண்கிறோம்.

அண்மைய எடுத்துக்காட்டு ஒன்றைத் தருவதானால், வெலிங்டனில் சிங்களப் படையதிகாரிகளுக்குப் பயிற்சி தருவதை அம்பலப்படுத்தி, தமிழக மக்களின் போராட்டத்தைக் கொண்டு நாம் அதை முறியடித்த போது, அதற்குச் சிங்கள அரசின் எதிர்வினை எத்துணைக் கடுமையாக இருந்தது எனக் கண்டோம். இந்திய அரசு நயந்து செகந்திராபாதில் பயிற்சி தருவதாகச் சொன்ன போதும் சிங்கள அரசு அதை ஏற்கவில்லை. தமிழக மக்களின் போராட்ட நெருக்குதலால் இந்தியத் தலைமை அமைச்சர் காமன்வெல்த் சந்திப்பைப் புறக்கணித்தால், அது உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து வேறு வழிகளில்



ஏற்படுத்துவதைக் காட்டிலும் கூடுதலான தாக்கத்தைச் சிங்கள மக்களிடமும் ஈழத் தமிழர்களிடமும் ஏற்படுத்தும் என்பதே புறநிலை உண்மை.

**2) போராட்டக் குழுவின் அமைப்பு வடிவம் குறித்து:**

இறுதி வரை உணவு மறுப்பு என்ற போராட்ட முடிவு தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அமைப்புக் குழுவில் எடுக்கப்பட்டது. கோரிக்கைகளின் முதல் வரைவினை நான் எழுதி அமைப்புக்குள்ளேயும் வெளியிலும் விவாதத்துக்கு விட்டுத் திருத்தங்கள் செய்தோம். எமது அமைப்பின் வலுக்குன்றிய நிலையையும், வேறு அமைப்பு சார்ந்த அல்லது அமைப்பே சாராத ஆற்றல்களை இம்முயற்சியில் இணைத்துக் கொள்வதன் தேவையையும் கருதிப் பார்த்து நானே என் சொந்த மதிப்பீட்டின் படி பொருத்தமான தோழர்களைத் தெரிவு செய்து போராட்டக் குழுவை உருவாக்கினேன். (சிறைப்போராட்ட அனுபவங்கள் இந்த வகையில் எனக்கு உதவின.) பொருத்தமான தோழர்கள் இன்னும் பலரும் கூட இருக்கலாம். ஆனால் என் நோக்கத்துக்கு இவ்வளவு பேர் போதும் எனக் கருதினேன். இவ்வாறு நான் தெரிவு செய்த தோழர்களில் அமைப்புச் சார்ந்தவர்கள் அவரவர் அமைப்பின் இசைவைப் பெற்றுத் தான் குழுவில் சேர்ந்தார்கள். ஆனால் அந்தந்த அமைப்புகளின் சார்பில் (அமைப்புகளின் 'பிரதிநிதி'களாக) அவர்கள் இடம் பெறவில்லை.

போராட்டக் குழுவுக்கு 'இலங்கையில் காமன்வெல்த் – எதிர்ப்பியக்கம்' என்று பெயரிட்டோம். இது கூட்டியக்கமோ கூட்டமைப்போ அன்று என்பதைப் பல சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தியுள்ளோம். போராட்டம் தொடங்கிய பின் நடந்த முதல் கலந்தாய்வுக் கூட்டத்தின் தொடக்கத்திலேயே போராட்டக் குழு அமைப்பாளர் தோழர் மதியவன் இதைத் தெளிவுபடுத்தியதோடு, ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தலாம் என்று முன்மொழியவும் செய்தார். அந்த முன்மொழிவு ஏற்கப்படாததால்தான் ஆர்ப்பாட்டம் உள் ளிட்ட நடவடிக்கைகள் ஆங்காங்கு முன்முயற்சி எடுக்கும் அமைப்புகளின் பெயரிலோ 'இலங்கையில் காமன்வெல்த் – எதிர்ப்பியக்கம்' என்ற பெயரிலோ மேற்கொள்ளப்பட்டன. இது ஒரு போராட்டத்துக்கென்று அமைக்கப்பட்ட போராட்டக் குழு, அவ்வளவுதான்.

போராட்டப் போக்கில், குறிப்பாக உணவு மறுப்புப் போராட்டத்தை நீடிப்பது அல்லது கைவிடுவது குறித்து, போராட்டக் குழுவில் இடம் பெற்ற தோழர்கள் சார்ந்த அமைப்பு களின் முன்மொழிவுகளை நானும் போராட்டக் குழுவும் ஏற்க மறுத்த நேர்வுகளும் உண்டு. இந்த நுட்பமான வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் ஏன் இந்த அமைப்பைச் சேர்க்க வில்லை, அந்த அமைப்பைச் சேர்க்கவில்லை என்ற கேள்வியே எழாது.

தமிழகத்தில் கொள்கை வழிப்பட்ட ஈழ ஆதரவுக் கூட்டமைப்பு ஒன்றின் தேவை உள்ளது என்ற எண்ணம் எமக்கும் உள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்வது பற்றி நாம் இப்போதாவது கருதிப் பார்க்க வேண்டும்.

(போராடிய எனக்கும் எனக்குத் துணை நின்ற தோழர்களுக்கும் அரசியல் அல்லாத தனிப்பட்ட உள்நோக்கம் கற்பித்துச் சொல்லப் பட்ட குற்றச்சாட்டுகள் விடைபெறும் தகுதியே இல்லாதவை என ஒதுக்கித் தள்ளி விடுகிறேன். கொள்கை, நடைமுறை சார்ந்த குற்றாய்வுகளுக்கு மட்டும் விடை சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.)

**3) உணவுமறுப்புப் போராட்டம் நிறைவு குறித்து:**

கோரிக்கைகளுக்கும் உணவுமறுப்புப் போராட்டத்துக்கும் தமிழக அளவில் மிகப் பரவலான ஆதரவு திரட்டுவது என்று முடிவு செய்து, அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள், அமைப்புகள், குழுக்களுக்கும்,

தனிப்பட்டவர்களுக்கும் கூட வேண்டுகோள் கடிதம் அனுப்பினோம். ஒருசிலர் விடு பட்டிருந்தால் அது எங்கள் பிழைதான். எங்கள் போராட்ட உத்தியின் கூறுகள்:

1) விடாக்கண்டனாக உள்ள முதற்பகையை (diehard first enemy) அறவே தனிமைப் படுத்துதல்.

2) பிற பகைவர்களைச் செயலிழக்கச் செய்தல் (neutralisation), இயன்றால் முதற்பகைக்கு எதிராகத் திருப்ப முயலுதல்.

3) நட்பு ஆற்றல்களின் ஊசலாட்டத்தைப் போக்கி நெருக்கமாக ஒன்றுபடுத்துதல்.

4) முழுக்க நம்பகமான நட்பு ஆற்றல்களை உறுதியாகச் சார்ந்து நின்று போராட்டத்தை முன்னெடுத்தல்.

கோட்பாட்டளவில் இதுவே அனைத் தளாவிய ஐக்கிய முன்னணிப் பேருத்தி (All-in United Front Strategy) எனப்படும். நம்முடையது மிகச் சிறிய போராட்டம்தான். ஒரு புரிதலுக்காகச் சொல்வதென்றால், சப்பானிய வன்படையெடுப்புக்கு எதிரான போராட்டத்தில் தோழர் மாவோ தலைமையில் சீனப் பொதுமைக் கட்சி இந்தப் பேருத்தியை வெற்றிகரமாகச் செயல்படுத்தியது.

ஒவ்வொரு தூலமான (concrete) சிக்கலையும் அதைச் சூழ்ந்துள்ள தூல நிலைமைகளையும் கணக்கில் கொண்டுதான் ஒரு தூலமான போராட்டத்திற்குரிய பகைநிலை, நட்புநிலை, இரண்டுங்கெட்டான் நிலைகளைக் கணிக்கவும், அந்தக் கணிப்பின் அடிப்படையில் போராட்ட உத்திகளை வகுக்கவும் வேண்டும். பொறுமையும் நிதானமும் இல்லாமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற முறையில் எல்லா நிலைகளிலும் எல்லாரையும் ஒருங்கே பகைத்துக் கொள்ளும் அணுகுமுறை நமக்கும் நம் மக்களுக்கும் தோல்வியைத் தரும். பகைவனுக்குத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து வெற்றியைக் கையளிப்பதில் போய் முடியும். மக்கள் போராட்டத்தின் தேவைகளைக் கருத்தில் கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் புரட்சிகர வாய்வீச்சில் ஈடுபடுவது – லெனின் சொன்னது போல் – செயலற்ற தீவிரவாதமே (passive radicalism) தவிர வேறன்று.

இலங்கையில் காமன்வெல்த் – எதிர்ப்பியக் கத்தின் பார்வையில் இந்திய அரசுக்கெதிரான அனைத்து ஆற்றல்களையும் நம் போராட் டத்துக்கு ஆதரவாக அணிதிரட்டவே முயன் றோம். இவர்களில் சிலர் தரும் ஆதரவு நிலையற்றதாக, உறுதியற்றதாக, உள்நோக்கங் கொண்டதாக, உதட்டளவிலானதாக இருக் கலாம் என்பது எங்களுக்குத் தெரியாத செய்தியன்று. என்றாலும் அரசியலில் உள் நோக்கங்களைக் காட்டிலும் புற விளைவுகளே முகாமையானவை என்ற தெளிவு எங்களுக்கு இருந்த காரணத்தால், எவரது ஆதரவைக் கண்டும் நாங்கள் மிரளவில்லை. ஏனென்றால் எங்கள் கோரிக்கைகளில் உறுதியாக இருந் தோம். எவருடைய ஆதரவுக்காகவும் அவற்றில் சிறு மாற்றமும் செய்து கொள்ள மாட்டோம் என்பது எங்களுக்கு ஆதரவு தெரிவித்த வர்களுக்கே தெரிந்த செய்திதான்.

உணவுமறுப்புப் போராட்டம் தொடங்கு வதற்கு முன்பே செப்டம்பர் 26ஆம் நாள் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பல்வேறுபட்ட அரசியல் ஆற்றல்களும் கலந்து கொண்டனர். காட்டாக, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் தேர்தல் அரசியலில் எதிரெதிர் முகாமில்



இருப்பவை. ஆனால் இந்த ஆர்ப்பாட்டத்தில் மல்லை சத்யாவும் தொல். திருமாவளவனும் ஓரணியாக நின்று முழக்கங்கள் எழுப்பிடக் கண்டோம். தேர்தல் அரசியலில் ஈடுபட்டுள்ள வர்களும் பொதுவாகத் தேர்தலைப் புறக்கணிப் பவர்களும் – தலித் அமைப்புகளும் இசுலாமிய அமைப்புகளும் – திராவிட அமைப்புகளும் தமிழ்த் தேசிய அமைப்புகளும் – அமைப்புசாரா தமிழ் உணர்வாளர்களும் மனித உரிமை ஆர் வலர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்று திரண்டனர். இந்தக் கொள்கை வழிப் போராட்ட ஒற்றுமையின் தேவையை அனை வரும் ஏற்று வலியுறுத்தியதை நான் தொலை விலிருந்து (மருத்துவமனையில் இருந்த படி) கேட்டு மகிழ்ந்தேன். இந்த வகையில் போராட்டம் தொடங்கும் போதே வெற்றிதான் என்று உடனிருந்த தோழர்களிடம் சொன் னேன்.

பிறகு நடந்தவை – உயர் நீதிமன்றத்தில் நாம் வழக்காடிப் பெற்ற வெற்றி, திருவள்ளுவர் கோட்டம் அருகில் அக்டோபர் முதல் நாள் நாம் அமைத்துக் கொண்ட களம், அணி அணியாகத் தலைவர்களும் தொண்டர்களும் மாணவர்களும் தொழிலாளர்களும் பொது மக்களும் வந்து தெரிவித்த ஆதரவு, ஊடகங்கள் வெளியிட்ட செய்திகள், உலகத் தமிழர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு – அனைவரும் அறிந்தவையே.



விடுதலைச் சிறுத்தைகள், மதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழர்நலம் பேரியக்கம், தமிழ்நாடு மக்கள் கட்சி, மே 17 இயக்கம், சேவ் தமிழ்ஸ், காஞ்சி மக்கள் மன்றம், தமிழர் எழுச்சி இயக்கம், உறவுகள், நீதியின் குரல், தமிழர் முன்னேற்றக் கழகம், தமிழர் குடியரசு முன்னணி, தமிழ்த் தேச மக்கள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா, தொழிலாளர் சீரமைப்புக் குழு, தமிழ்த் தேசிய மக்கள் இயக்கம், தமிழ்த் தேசியக் குடியரசு இயக்கம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்... இந்தப் பட்டியல் நீண்டு நீண்டு செல்லக் கூடியது. வைகோ, திருமா, சீமான், வேல்முருகன், ஜவாகிருல்லா ... இப்படிப் பலதரப்பட்ட தலைவர்களும் தொண்டர்களும் வாய்மொழி ஆதரவு தெரிவித்ததோடு நில்லாமல், உருப்படியான பல உதவிகளும் செய்தார்கள். குறிக்கப்பெற்ற பெயர்களை விடவும் குறிக்காமல் விட்ட பெயர்களே கூடுதல் என்பதை உணர்ந் துள்ளேன். ஆனால் ஈண்டு நான் எழுதுவது குற்றாய்வுகளை எதிர்கொள்வதற்காகத்தானே தவிர, நன்றிக் குறிப்புக்காக அன்று. இந்த அமைப்புகள், தலைவர்களில் யாரும் எமது கோரிக்கைகளையோ போராட்ட முறை யையோ வெளிப்படையாகவோ எங்களிடம் தனிப்பட்டோ – எவ்வகையிலும் குறைகூற வில்லை என்பதைப் பதிவு செய்வதே என் நோக்கம்.

குற்றாய்வுகளில் மையமாக இருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்குதான் என்பதால், அது பற்றிக் கொஞ்சம் விரிவாக எழுத வேண்டும். எமது போராட்டக் குழுவின் சார்பில் அனைத்துக் கட்சிகளிடமும் ஆதரவு கேட்டோம். மூன்றாம் நாள் திரு பொன்முடியும், நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவனும் நேரில் வந்து கலைஞர் சார்பில் ஆதரவு தெரிவித்தனர். அப்போது அங்கிருந்த தொல். திருமாவளவன் "திமுக

சார்பில் திரு மு. க. ஸ்டாலின் தலைமையில் தில்லிக்கு ஒரு குழுவை அனுப்பலாம்" என்று முன்மொழிந்தார்.

நான்காம் நாள்... உண்ணாவிரதத்தைக் கைவிடும் படி கலைஞர் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு நான் நன்றி சொல்லி, என் உயிர் குறித்துக் கவலைப்படுவோரின் அக்கறையைப் புரிந்து கொள்கிறேன், ஆனால் இப்போராட்டத்தின் கோரிக்கைகளே என் உயிர் என்று தெளிவுபடுத்தி உணவுமறுப்பைக் கைவிட மறுத்தேன் என்பது அனைவரும் அறிந்ததே. எவர் வேண்டுகோளுக்காகவும் நான் என் உறுதியிலிருந்து மாறவில்லை.

ஏழாம் நாள் என்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்த்த பிறகும் உணவு மறுப்பைத் தொடர்ந்தேன்.

பதினொன்றாம் நாள் இராயப்பேட்டை மருத்துவமனையிலிருந்து வெளியேற்றப்பட்டு கீழ்ப்பாக்கத்திலுள்ள மக்கள் கல்வி மாமன் றத்தில் உணவு மறுப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தேன். 13ஆம் நாள் தோழர் சுபவீ திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்களுடன் என்னை வந்து பார்த்தார். என்ன செய்தால் நீங்கள் உணவு மறுப்பைக் கைவிடுவீர்கள்? என்று கேட்டார். "என் கோரிக்கையை ஓரளவாவது ஏற்கச் செய்தால்..." என்று பதிலளித்தேன். இங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்க் குழு ஒன்று தில்லிக்குப் புறப்படுவதாக இருந்தால் முடித்துக் கொள்வீர்களா? என்று கேட்டார். "இல்லை, அவர்கள் பதில் வாங்கி வரட்டும்" என்றேன். "பதில் பாதகமாக அமைந்து விட்டால்..." என்று அச்சத்துடன் கேட்டார். "எந்தப் பதிலோ வாங்கி வரட்டும்" என்றேன். சுபவீ ஆலோசனைப்படி கலைஞருக்கு ஒரு கடிதமும், நாடாளுமன்ற உறுப்பினர் டி. ஆர். பாலுவுக்கு ஒரு கடிதமும் நேரில் சேர்ப்பித்தோம்.

அன்றிரவு அனைத்து இயக்கத் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. போராட்டத்தை விரிவுபடுத்துவதாகவும் தீவிரப்படுத்துவதாகவும் தலைவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால் என் உடல்நிலை மோசமாகி விட்டதைக் கருத்தில் கொண்டு விரைவில் உணவுமறுப்பைக் கைவிடும்படி வலியுறுத்தினார்கள். வெற்றி அல்லது வீரச்சாவு என்பதில் நான் உறுதியாக இருப்பதைச் சொன்னேன். சிறும வெற்றியாவது இல்லாமல் என்னால் உணவுமறுப்பைக் கைவிட முடியாது என்று தெளிவுபடுத்தினேன்.

அன்றிரவு போராட்டக் குழு கூடிய போது, தமிழ்நாடெங்கும் போராட்டம் விரிவடைந்து வருவதையும், தமிழக வாழ்வுரிமைக் கட்சி உடனே நடத்தவிருக்கும் போராட்டத்தையும், நாம் தமிழர், விடுதலைச் சிறுத்தைகள், மே 17, எஸ்.டி.பி.ஐ., பல்வேறு மாணவர் அமைப்புகள் அடுத்தடுத்து நடத்தவிருக்கும் போராட்டங் களையும், பிற அமைப்புகள் கூட்டாகவோ தனித்தோ நடத்தக் கூடிய போராட்டங்களையும், குறிப்பாக மேதா பட்கர் அனைத்திந்திய அளவில் இதற்கென இயக்கம் நடத்துவதாக உறுதியளித்திருப்பதையும் நம் போராட் டத்துக்குக் கிடைத்துள்ள வெற்றியாகக் கருதலாம், அந்த அடிப்படையில் உணவு மறுப்பை முடித்துக் கொள்ளலாம் என்ற கருத்து பேசப்பட்டது. தில்லியிலிருந்து ஒரு பதில் கிடைத்தால் அதை இன்னொரு சிறும (குறைந்தபட்ச) வெற்றியாகக் கருதலாம், இரண்டும் கிடைத்தால் நல்லது, என்ன கிடைக்கிறது என்று இன்னும் ஓரிரு நாள் பொறுத்துப் பார்க்கலாம் என்று நான் கூறியதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

அக்டோபர் 14ஆம் நாள் (உணவு மறுப் பிலும் 14ஆம் நாள்) காலை உணவுமறுப்பைக் கைவிடும்படி பல்வேறு தலைவர்களும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தனர். அண்ணன் வைகோ தோழர் பாவேந்தனைத் தொலைபேசியில் அழைத்து, இன்றிரவு நேரில் வருகிறேன், நாளை மதியத்துக்குள் தியாகுவின் உண்ணாவிரதத்தை முடித்தாக வேண்டும் என்று சொல்லியிருந்தார்.

அதே 14ஆம் நாள் மாலை நான் இராசீவ் காந்தி பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டேன். என் உடல்நிலை படுமோசமாகி விட்டதாகவும், எந்நேரமும் எதுவும் நேரிடலாம் என்றும் மருத்துவர்கள் எச்சரித்தார்கள். ஆனால் எவ்வித சிகிச்சையும் ஏற்க மறுத்து உணவு மறுப்பைத் தொடர்ந்தேன். அன்றிரவு 8 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் டி. கே. எஸ். இளங்கோவன் நேரில் வந்தார்.

தலைமை அமைச்சர் மன்மோகன் சிங் கலைஞருக்கு எழுதிய கடிதத்தின் ஒளிப்படியை என்னிடம் சேர்ப்பித்தார். உடனே உணவு மறுப்பைக் கைவிடும்படி கலைஞர் கேட்டுக் கொண்டதாகவும் சொன்னார். கலைஞர் எடுத்த முயற்சிக்காக நன்றி தெரிவித்தேன். ஆனால் போராட்டக் குழுவினருடன் கலந்து பேசி நாளை காலை முடிவை அறிவிப்பதாகச் சொல்லி அனுப்பி வைத்தேன்.

தலைமையமைச்சரின் கடித விவரம் அனைவரும் அறிந்த ஒன்றே. காமன்வெல்த் தொடர்பான நம் கோரிக்கைகள் எதுவும் அதில் திட்டவட்டமாக ஏற்கப்படவில்லை. அப்படி எந்த வாக்குறுதியும் இல்லை. முடிவெடுக்குமுன் தமிழ் மக்களின் உணர்வுகளையும் கணக்கில் கொள்வதாக மட்டுமே உறுதியளித்திருந்தார். இந்த உறுதிமொழியின் அடிப்படையில் கலைஞர் முயற்சி எடுத்து என் (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகுவின்) உணவுமறுப்பை முடித்து வைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்திய அரசு குறித்து நமக்கு எவ்வித மயக்கமும் இல்லை. மன்மோகனின் வார்த்தையை நம்புவது, நம்ப மறுப்பது என்ற கோணத்தில் இச்சிக்கலை அணுகுவது அகநிலைப் பார்வையாகி விடும். சிங்களப் பேரினவாத அரசுக்கு எல்லா வகையிலும் உடந்தையாக இருந்த இந்திய அரசு 2009, 2011 காமன்வெல்த் அரசாங்கத் தலைவர் சந்திப்புகளில் இலங்கையில் அடுத்த சந்திப்பை நடத்துவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு ஆதரவளித்த இந்திய அரசு – 2013 சந்திப்பை இலங்கையில் நடத்துவதற்கு முதற்பெரும் காரணியமாகிய இந்திய அரசு – இந்தச் சிக்கல் முழுவதையும் இதுவரை இந்தியாவின் அயலுறவுக் கொள்கை நலன், இந்தியாவின் புவிசார் அரசியல் என்ற பெயரில் இலங்கையுடன் நட்பு, தமிழர்கள்பால் பகைமை ஆகிய நோக்கில் மட்டுமே அணுகிப் பழகிய இந்திய அரசு – அந்த அரசின் தலைமை அமைச்சர் தமிழ் மக்களின் உணர்வுகளையும் ஒரு காரணியாகக் கருத்தில் கொண்டு முடிவெடுக்க உறுதியளிக்கிறார் என்றால், அது எவ்வளவு உறுதியற்ற உறுதிமொழி என்றாலும், நாம் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, தொடரும் போராட்டத்தில் அதையும் ஒரு கருவியாக்கிக் கொள்வதுதான் அறிவுடைமை. யார் கொடுத்த உறுதி? யார் வழியாகக் கொடுத்த உறுதி? என்பதையெல்லாம் விட புறநிலையில் அந்த உறுதியை நம் மக்களின் வெற்றிக்கும் பகையின் தோல்விக்கும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்றுதான் பார்க்க வேண்டும்.

உணவுமறுப்புப் போராட்டம் தொடங்குவதற்கு முன்பும் தொடர்ந்து கொண்டிருந்த போதும் எங்கள் கோரிக்கைகளையும் போராட்டத்தையும் ஆதரித்த பல தலைவர்களும், இந்திய அரசின் கொடுந்தன்மையை எடுத்துக்காட்டி, அது நமக்கு எந்த விடையும் சொல்லாது என்றுதான் எச்சரித்து வந்தார்கள். இந்திய அரசின் தன்மை பற்றிய அவர்களது கருத்தில் முழு உடன்பாடு கொண்டிருந்தாலும், தமிழ் மக்களின் போராட்டத்தைக் கொண்டு இந்திய அரசைச் சற்றேனும் அசைக்க முடியும் என்று நம்பினோம். தொடர்ச்சியான போராட்டத்தின் வாயிலாக இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் கொண்டுவர முடியும் என்று இப்போதும் நம்புகிறோம். இந்திய அரசை நம்பிப் போராடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்திய அரசை நம்பவில்லை என்பதால்தான் கடுமையாகவும் விடாப்பிடியாகவும் போராட வேண்டியுள்ளது.

வலிமை மிக்க ஒரு வல்லாதிக்க அரசோடு வரலாற்று நியாயமும் அறவலிமையும் தவிர வேறு கருவி ஏதும் கையிலின்றிப் பொருதுகையில் சிறுசிறு சிறும வெற்றிகளையும் கூட படிகளாகக் கொண்டு முன்னேற வேண்டிய தேவை உள்ளது. இந்த அரசியல் போராட்டத்தைப் படையியல் சமர்க் களங்களோடு ஒப்புநோக்கினால் இந்தத் தேவையை எளிதில் உள்வாங்க இயலும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம், இலங்கையைப் புறக்கணிக்கும் இயக்கம், காமன்வெல்த் எதிர்ப்பு ஆகியவை குறித்துக் குறுகிய காலத்தில் பரவலான விழிப்புணர்வைத் தோற்றுவித்ததும், தமிழகத்தின் அரசியல் ஆற்றல்களை காமன்வெல்த் போராட்டத்தில்

ஒருமிக்கச் செய்ததும், விரைவாக அவர்கள் களம் காணத் தூண்டுகோலாக இருந்ததும், ஆங்காங்கு வெடித்தெழுந்த மாணவர் போராட்டங்களும், ஊடகங்களில் இதை மைய விவாதப் பொருளாக்கிப் பகையாற்றல்களைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளியதும் ... இந்த நற்பயன்கள் எல்லாம் பதினைந்து நாள் பட்டினிப் போராட்டத்துக்கும் அதை மைய மாகக் கொண்டு எழுந்த மக்கள் போராட்டங் களுக்கும் கிடைத்த வெற்றிகளே. இந்த வரிசையில் கடைசியாக வந்ததே தலைமை அமைச்சரின் கடிதம். நாங்கள் போராட்டக் குழுவில் விவாதித்து, இரு சிறும வெற்றிகளில் ஒன்றாவது ஈடேறாமல் உணவுமறுப்பைக் கைவிடுவதில்லை என்று முடிவெடுத்திருந் தோம். இப்போது எங்களுக்கு இரு சிறும வெற்றிகளுமே ஒருங்கே கிடைத்து விட்டதால் என் உணவு மறுப்புப் போராட்டம் வெற்றிகர மான முடிவுக்கு வந்தது. போராட்டக்குழு சார்பில் வெளியிட்ட அறிக்கையில் இதைத் தெளிவுபடுத்தியுள்ளோம்.

பதினைந்தாம் நாள் மதியம் முடிந்திருக்க வேண்டிய உணவுமறுப்புப் போராட்டம் தமிழகக் காவல்துறை அரசியல் ஏவல்துறை யாகச் செயல்பட்டு ஏற்படுத்திய அற்பத்தன மான இடையூறுகளால் மாலை 4 மணிக்குத் தான் நிறைவு பெற்றது. அப்போது நடந்த ஊடகச் சந்திப்பின் போது மேற்சொன்ன செய்திகளையெல்லாம் விரிவாகவும் தெளி வாகவும் எடுத்துரைக்க என் உடல்நிலையோ மனநிலையோ இடந்தரவில்லை. இப்போது அந்தக் குறையை என்னால் இயன்ற வரை சரி செய்திருப்பதாக நம்புகிறேன்.

இந்த என் எழுத்தின் அடிப்படையில் ஆக்கவழிப்பட்ட விவாதத்துக்கு அணியமாக உள்ளேன்.

இறுதியாக நான் வலியுறுத்திச் சொல்ல விரும்பும் இரண்டு:

1) உணவுமறுப்புப் போராட்டத்தின் நிறைவு என்பது ஒரு போராட்ட வடிவத்தின் முடிவுதானே தவிர போராட்டத்தின் முடிவு அன்று. விவாதங்களைக் காத்திரமான முறையில் நடத்திக் கொண்டே போராட்ட ஒற்றுமையை விரிவுபடுத்தவும் உறுதிப் படுத்தவும் உழைப்போம்.

2) வெற்றி அல்லது வீரச்சாவு! இந்த உறுதிப் பாட்டிலிருந்து இறுதிவரை நான் பிறழவே இல்லை. மேற்சொன்னது போன்ற சிறும வெற்றியாவது கிடைத்திருப்பதாய் நானும் தோழர்களும் உண்மையாக நம்பியதால்தான் உணவுமறுப்பை முடித்துக் கொண்டேன். இல்லையேல் இதை எழுத நான் உயிருடன் இருந்திருக்க மாட்டேன். ஆனால் என் உயி ரிழப்பு இப்போராட்டத்துக்கு உரமூட்டி யிருக்கும் என்றுதான் இப்போதும் நம்புகிறேன்.

சிறு வெற்றிதான்! அதைப் பெருவெற்றியாக மாற்றப் பாடாற்றுவோம்! முதல் வெற்றிதான்! அதை முழு வெற்றியாக்க உழைப்போம்! ❖




## கிளிநொச்சியில் நில அபகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சியில் சிங்கள இராணுவ முற்றுகைக்கு இடையிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நில அபகரிப்புக்கு எதிரான கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இராணுவத்தையும் மீறி மக்கள் சிறிய அளவில் என்றாலும் அச்சமின்றி பங்கேற்றது நல்ல தொடக்கம்.

எமது நிலமும் எமது வீடும் எமக்கு வேண்டும்!

இராணுவமே வெளியேறு!

எனும் முழக்கங்கள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப் பட்டன.



# போரில் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான அனைத்துலக மாநாடு - சிங்களத்தின் தன்முரண்பாடு

போரில் நடக்கும் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான அனைத்துலக மாநாடு இலண்டனில் சூன் 1ஆம் நாள் தொடங்கியது. 'போரில் பாலியல் வன்கொடுமைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஐநா பிரகடனத்தை அங்கீகரித்த அரசுகளுக்குத்தான் இம்மாநாட்டிற் கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதை அங்கீகரிக்காமல் இருப்பதால் எங்களுக்கு அழைப்பு இல்லை. ஆனால் நாங்கள் மாநாட்டில் பங்குபெறவே விரும்பினோம்' என இலண்டனி லுள்ள இலங்கைத் துணைத் தூதர் நெவில் டி சில்வா பிபிசி யிடம் தெரிவித்தார். இலங்கை ஏன் அதை அங்கீகரிக்கவில்லை என்பதற்கான விளக்கம் தர அவர் மறுத்துவிட்டார்.

அதேபோது பிரிட்டனின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் ஹியூகோ ஸ்வயரின் அனுப்பிய மாநாட்டு அழைப்பு எங்களுக்குக் கிடைத்தது என இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி. எல். பெரிஸ் உறுதிப்படுத்தினார். இந்த மாநாட்டின் முக்கியத்துவத்தை ஒப்புக்கொண்டாலும், சர்வதேசத்தின் ஒரு பகுதி அரசுகள் மட்டும் ஐநா பிரகடனத்தை ஏற்றுள்ள நிலையில் நாங்கள் அதை அங்கீகரிக்க முடியாது. இந்த மாநாடு எமது நாட்டுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என்பதால் இதில் இலங்கை அரசு பங்கேற்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார். கண்ணியமிக்க எந்த சர்வதேச அவையிலும் இலங்கை பங்கேற்க முடியாத நிலை மெல்ல உருவாகி வருகிறது. இதை மேலும் விரிவுபடுத்த வேண்டும். இலங்கையைத் தனிமைப்படுத்துவதில்தான் நமது வெற்றி அடங்கியுள்ளது. ❖

---

# திண்ணம் கலைப் பண்பாட்டுக் கழகம் நடத்தும் ஈழத் தமிழ் ஏதிலியருக்கான இலக்கியப் போட்டி!

ஈழத் தமிழ் ஏதிலியர் முகாமிலுள்ள மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், இலைமறை காயாக இருக்கும் படைப்பாளிகளை வெளிக்கொணரும் விதமாகவும் திண்ணம் கலைப் பண்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாகக் கழகம் மாணவர்கள் உட்பட அனைத்து வயதினருக்கும் நான்கு பிரிவுகளின் கீழ் இலக்கியப் போட்டி நடத்தவுள்ளது. கட்டுரை, கவிதை, ஓவியம், சிறுகதை, நாடகம், தன்வரலாறு போட்டிகளுக்கான தலைப்புகள் அறிவிக்கப்பட்டு, நம் மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கேற்று வருகின்றனர். மாணவர்களை இலக்காய்க் கொண்டிருந்தாலும், அனைத்து வயதினரும் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு ஏற்ப தலைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கென கவிஞர்கள், எழுத்தாளர்களைக் கொண்ட தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களைக் கொண்டு படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் அறிவிக்கப்படும். பரிசளிப்பு விழாவைத் திண்ணம் சிறப்புற நடத்தவுள்ளது. வரும் 27.07.2014 ஞாயிறு அன்று இவ்விழா நடைபெறும். முகாம்களில் உள்ள சில இளைஞர்கள் தங்கள் உழைப்பை மட்டும் நம்பி இப்பெரு முயற்சியில் இறங்கியுள்ளனர். இடம் நிதி நெருக்கடியால் முடிவுறாமல் உள்ளது. தாய்த் தமிழக உறவுகள் இம்முயற்சிக்குப் பொருளியல் வகையிலும் கருத்தியல் வகையிலும் ஆதரவு தரவேண்டுமென அன்புரிமையுடன் வேண்டுகிறோம்.

தொடர்பு: பே. நிதர்சன், மே/பா ஜீவானந்தம், ப.எண். 2, பு.எண். 5/2, அம்பாள் நகர் முதன்மைச் சாலை, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை-32. பேச: 9962774837 மின்மஅஞ்சல்:thinnam2012@gmail.com



2014 மே 8ஆம் நாள் தஞ்சாவூரில் தோழர் சம்புகன்–பெனிடா மேரி இல்லற ஏற்பு விழா தோழர் தியாகு தலைமையில் நடைபெற்றது. இது சாதி மறுப்பு சமய மறுப்புத் திருமணமாகும். இரு வீட்டாரும் தோழர்கள்–நண்பர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் சார்பில் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ரூ. 2000 நன்கொடையாக வழங்கினர்.

# இல்லறத் துணைக்குப் பெண் தேவை


தோழர் பாரி. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அமைப்புக் குழு உறுப்பினர். பட்டதாரி. வயது 45. மணமுறிவு பெற்றவர். பத்து வயதில் ஆண் மகன் உண்டு. மறுமணம் செய்து இல்லறம் காண விரும்புகிறார். 30 முதல் 45 வரைக்குமான வயதில் பெண் தேவை. சாதி மதம் பொருட்டில்லை. கைம்பெண், கைவிடப்பட்டவர், குழந்தையுடையார், ஈழத்துப் பெண் என்றால் மேலும் நன்று. விருப்பமுள்ளோர் தமிழ்த் தேசம் முகவரிக்கு எழுதலாம்.

**தொடர்பு எண்: 97154 17170**



**தமிழீழத் தேசத்தின் கால் பந்தாட்ட அணி**

அங்கீகரிக்கப்படாத தேசங்களுக்கான கால்பந்தாட்ட உலகக்கிண்ணப் போட்டியை கொனிஃபா(CONIFA) எனும் அமைப்பு ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில் புலம் பெயர் தமிழ் இளைஞர்கள் தமிழீழக் கால்பந்தாட்ட அணியினை உருவாக்கியுள்ளனர். இரண்டாம் முறையாகச் சென்ற *02.06.2014* அன்று சுவீடன் நாட்டில் ஐரோப்பிய நேரம் *10* மணியளவில் தமிழீழ அணி போட்டியில் பங்கேற்றது. தமிழீழத்திற்கும் அராமியன்ஸ் சர்யோயே (Thamizheezham FA vs Arameans suryoye FA) அணிகளுக்கு இடையே போட்டி நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக மறுநாள் *03.06.2014* அன்று தமிழீழத்திற்கும் குர்திஸ்தான் (Thamizheezham FA vs Kurdistan FA) அணிகளுக்கிடையே போட்டி நடைபெற்றது. இதில் நமது அணி *2* முறை பந்தை இலக்கில் அடித்து வெற்றியும் ஈட்டியுள்ளது. தமிழீழ அணியின் வெற்றி தமிழீழத்தின் வெற்றிக்கு உழைக்க நமக்கு ஊக்கம் தரட்டும். அணியின் வெற்றி போல் தேசத்தின் வெற்றியை வென்றெடுப்போம்!



## தமிழ்த் தேசிய நோக்கில் அறிஞர் அண்ணா

### – முனைவர் த. செயராமன்

நம் **சமூகநீதித் தமிழ்த் தேசம்** ஏட்டில் *(2009 தை/சனவரி)* இதழிலிருந்து) அறிஞர் அண்ணா குறித்து எழுதிக் கொண்டிருந்த ஆய்வுத் தொடரை மீண்டும் தொடர வேண்டுமென நாமும் தமிழ் ஆர்வலர்களும் அன்புரிமையுடன் கேட்டு வந்தோம். இப்போது புதுப் பொலிவுடன் மீண்டெழுந்துள்ள நம் **தமிழ்த் தேசம்** ஏட்டில் அத்தொடரைத் தொடர அவர் மகிழ்வுடன் இசைவு தெரிவித்துள்ளார். இத்தொடரில் இது வரை *11* பகுதிகள் வந்துள்ளன. பகுதி *12* அணியமாகிக் கொண்டிருக்கிறது. உவத்தல் காய்தலின்றியும் அறிவியல் வழிநின்றும் தமிழ்த் தேசிய நோக்கில் அறிஞர் அண்ணா எனும் அரசியல் ஆளுமை குறித்துத் தொடர்ந்து நம்மோடு உரையாட வரும் முனைவர் த. செயராமனை வரவேற்க வேட்கையுடன் காத்திருப்போம். – அடுத்த இதழ் *(2014 ஆனி)* வரும் வரை!

**ஆசிரியர்.**




# வெல்க தெலங்கானா!

## பரிமளா (சேவ் தமிழ்ஸ்)

சென்ற ஆண்டு அனைத்துலக உழைக்கும் பெண்கள் நாளை முன்னிட்டு ஐதராபாத்தில் நடந்த ஒரு நாள் நிகழ்ச்சியில் உரையாற்றுவதற்காக நான் இங்கிருந்து சென்றிருந்தேன். தெலங்கானா போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வு நடந்தது. அப்போது போராட்டத்தில் உயிர் விட்ட மாணவர் ஒருவரின் தாயார் பேசும் பொழுது, பெருமை கலந்த கண்ணீருடன் போராட்ட வடுக்களையும் வலிகளையும் சுமந்தபடி 'ம தெலங்கானா மீக்கே காவாலி' என்று சொன்ன வார்த்தைகள் இன்று நனவாகி உள்ளன.

கடந்த *2014* சூன் *2*ஆம் நாள் இந்தியாவின் *29*ஆவது மாநிலமாகத் தெலங்கானா அறிவிக்கப்பட்டது. *3.5* கோடி மக்கள்தொகை, *10* மாவட்டங்கள். நாற்புறமும் நிலம் சூழ்ந்த மாநிலமாகத் தெலங்கானா அமைந்துள்ளது. சூன் 2 ஆம் நாள் மாநில அரசின் பதவி ஏற்பு விழா நடந்தது. தெலங்கானா இராஷ்ட்ரிய சமிதியின் தலைவர் சந்திரசேகர ராவ் முதல்வராகப் பொறுப்பேற்றார்.

ஒரு சமூகம் முழுமையும் ஓரங்குலம் முன்னேறிச் செல்வதற்கு எத்துணை நீண்ட நெடிய போராட்டம் நடத்த வேண்டி இருக்கின்றது என்பதை தெலங்கானா போராட்டம் நமக்கு உணர்த்துகின்றது. தெலங்கானா மக்களின் வீரஞ் செறிந்த போராட்ட வரலாறு போராடும் அனைத்து மக்களுக்கும் ஊக்கமாகும்.

தனி மாநிலமானதால் எல்லாப் பிரச்சனைகளும் தீர்ந்து விடுமா? மாநில அரசே ஒரு 'மேற்பார்வை' அரசு தானே? என்று கேட்கலாம். நாமும் பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதாகக் கருதவில்லை. சனநாயகத்திற்கான போராட்டத்தில் ஓரடி முன்னே போயினர் தெலங்கானா மக்கள் என்கின்றோம். அடக்குமுறைக்கு அடிபணியாத பண்பைத் தமது இரத்தத்திலேயே கொண்ட தெலங்கானா மக்கள் இந்திய அரசின் தேசிய ஒடுக்குமுறைக்கெதிராகவும் கிளர்ந்து எழுவார்கள்!

நீண்ட போராட்டத்தின் பயனாய்த் தெலங்கானா மக்கள் தமது வரலாற்று வளர்ச்சிப் போக்கில் ஓரடி முன்னேறியுள்ளனர். தெலங்கானா தனி மாநிலக் கோரிக்கையை ஆதரித்துக் குரல் கொடுத்தவர்கள் என்ற முறையில் தெலங்கானா மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கில் நாமும் பங்கு பெறுகின்றோம். தெலங்கானா போராட்டத் தியாகிகளுக்கு வீர வணக்கம்! தெலங்கானா மக்களுக்கு நமது நேசமிகு வாழ்த்து! ❖



# மார்க்சியக் குறள்

(குறள் வடிவில் மார்க்சியம்)

## 16. உழவு

**(வரலாற்றியல்)**

1. தானேமண் புதைந்து முளைக்கும் விதைகண்டு
தானுமதைச் செய்துகண்டார் பயிர்.

2. வேட்டையில் வேறாகும் மேய்ப்பு, மேய்ப்பிலும்
வேறாகும் வேளாண் தொழில்.

3. ஓடும்உயிர் வளர்ப்பு மேய்ப்பாயின், நிற்கும்
உயிர்வளர்ப்பு வேளாண் தொழில்.

4. அலையுறுமந் தையால்அலைவுற்றார்ஆயர், நிலைபயிர்
செய்துநிலை பெற்றாரு ழவர்.

5. காட்டுமிராண் டிவேடர் கால்நடை யினர்இடையர்
நாகரிக வாழ்வுக்கு ழவர்.

6. காட்டோடு வேடர்புல் வெளியில் இடையர்
ஆற்றங் கரையிலு ழவர்.

7. தோலாடை வேடர்க்கு முடியாடை இடையர்க்கு
நூலாடை உழவர்க்கு அணி.

8. சுட்டுண்ணல் முன்னவரின் வழக்கு, பொங்கல்
இட்டுண்ணல் உழவுசார் நடப்பு.

9. ஊன்ஒருவர் பால்ஒருவர் காண, மாட்டின்கண்
உழைப்பைக் கண்டவரு ழவர்.

10. வில்லாண்ட வர்வேடர் கோலாண்ட வர்ஆயர்
நல்லேர் ஆள்வாரு ழவர்.

**- மா. பாலு**


**தமிழ்த் தேசம்**

2014 வைகாசி / மே-சூன் ஆசிரியர்: தோழர் தியாகு தனிச்சுற்று மட்டும் ரூ. 10

**ஆசிரியர்:**
தோழர் தியாகு

**ஆசிரியர்க் குழு:**
நலங்கிள்ளி, இரா. பாலன்

**வடிவமைப்பு:**
சு. கதிரவன்

**அச்சாக்கம்:**
தமிழ்த் தேசம் அச்சுப் பணிகள்,
சென்னை



**வட அமெரிக்காவிலும் கனடாவிலும் எல்லாத் தொடர்புகளுக்கும்:**
தோழர் கோபால்
பத்திரிகையாளர், எழுத்தாளர்
**மின்ம அஞ்சல்:**
arumugamgopal9@gmail.com,
பேச: 0014166667357,
+13023573644, +4167669544

**வலைத்தளம்:**
www.tamilthesam.org

**தமிழ்த் தேசம் காண:**
www.keetru.com

**முகநூல்:**
தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்
thozharbharathi@gmail.com


**மின்ம அஞ்சல்:**
samooganeethithamizhthesam@gmail.com

**எல்லாத் தொடர்புகளுக்கும்:**
வே. பாரதி (தொலைபேசி: 986[illegible]5107107)
எம்.சி.ஏ. இல்லம் 2ஆவது மாடி,
120/1, முல்லைத் தெரு, பெரியார் பாதை,
சூளைமேடு, சென்னை–600 094.
thozharbharathi@gmail.com



**ஓரிதழ் : ரூ.10; ஓராண்டு : ரூ.120;**
**ஆறாண்டு : ரூ.600; வாழ்நாள் : ரூ.1200**

**அட்டை கருத்துப்படம்:**
கார்ட்டூனிஸ்ட் பாலா



# கடிதங்கள்

**அன்புத் தோழர் தியாகு,**

தமிழ்த் தேசத்தின் உள்ளடக்கச் செய்திகள், வடிவமைப்பு, நிழற்படங்கள் என அனைத்து நிலையிலும் இதழ் செழுமை பெற்றிருக்கிறது. ஒவ்வொரு செய்தியும் தகவல், அறிவியல், அறவியல் மற்றும் சமூக நோக்கில் விரிந்துள்ளது. குறிப்பாக, ஈழம் மற்றும் கல்வி தொடர்பான கட்டுரைகள் என்றும் நினைவில் கொண்டு பகிர்ந்து தெளிவுபெறத் தக்கவையாக இருந்தன. இப்போதைக்கு இதழ் ஆகச் சிறந்தவோர் ஆவணக் கிடங்காக நெடுவடிவம் கொண்டு நிமிர்ந்துள்ளது. இந்நிலை தொடரட்டும். அனைத்து வகையிலும் முயன்று இதழை மக்கள் மயமாக்குங்கள்.

தங்களது உழைப்பு மற்றும் அறிவாற்றலில் பெரும்பகுதியைத் தயங்காது இதழுக்கே செலவிடுங்கள். இவ்விதழின் நலம் விரும்பியாக நான் இருப்பேன். பாவலரேறு சொன்னதைப் போல, நீங்கள் "சூழ்வன மீறி"

**சுடர்வன செய்தீர்கள்**
**சுடர்வன செய்கிறீர்கள்**
**சுடர்வன செய்வீர்கள்!**

நல்வாழ்த்துகள் தோழரே!

**– கவிஞர் ஜெயபாஸ்கரன்,**
பொதுச் செயலாளர்,
தமிழ்ப் படைப்பாளிகள் பேரியக்கம்


**த**மிழ்த் தேசத்தை நீங்கள் உறுதியேற்றுக் கொண்டபடி தொடர்ந்து வெளியிடுவதன் மூலம் தமிழ்த் தேசியப் போராளிகளை உரு வாக்கும் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்து கிறேன்.

**– க. இரா.முத்துசாமி**
இயற்கை வாழ்வகம்,
திருப்பூர்

இனக்கொலை நடந்து ஐந்தாண்டு பின்பு ஐநா மனித உரிமை ஆணையத்தால் முன்னாள் நியூசிலாந்து நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மனித உரிமை மன்றத்தில் அமெரிக்க, பிரித்தானிய அரசுகள் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தாலும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலகத் தமிழர் பேரவையும், உலகத் தமிழர்களின் வேறு பல அமைப்புகளும் செய்த அயராத முயற்சியாலும் ... இராசபட்சே மீது விரைவில் விசாரணை ஆரம்பமாகப் போகிறது. இந்தியாவின் எதிர்ப்புக்கு நடுவில் இது சாதிக்கப்பட்டுள்ளது என்றால், தமிழர்களின் ஒன்றுபட்ட போராட்டமே காரணம். இனக் கொலையாளிகளைக் கூண்டிலேற்றும் நிகழ்ச்சிக்கு இது ஒரு தொடக்கம் மட்டுமே. இந்த ஒற்றுமை தொடர வேண்டும். விசாரணை வெற்றிகரமாக நடந்து முடிவதற்கு நம் விழிப்புணர்வு தேவை. போர்க்குற்ற விசாரணையை இனக் கொலை விசாரணையாக மாற்றும் சக்தி நம்மிடம்தான் உள்ளது. இந்தியாவில் தமிழர் இனக்கொலைக்குத் துணை போனவர்களையும் துரோகம் செய்தவர்களையும் தமிழக மக்கள் விரட்டியடித்துள்ளார்கள். அவர்களின் துணையோடு நாம் ஒன்றுபட்டுப் போராடினால் இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கச் செய்து நம் நோக்கத்தில் வெற்றி பெற முடியும். இல்லையேல் வல்லரசுகளின் உடந்தையோடு அழிவுச் சக்திகள் தலைதூக்கும். ஆவதும் அழிவதும் நம் கையில்!

**– ஆ. கோபால், ரொறன்ரோ, கனடா.**

# தாய்மொழி அறிவும் ஆங்கிலப் புலமையும்



○ நலங்கிள்ளி

நம் தமிழ்ப் பெற்றோர்கள் திடீர்க் கல்வியாளர்களாகி உதிர்க்கும் அறிவு முத்துக்கள் பல. தமிழ் மண்ணில் தப்பித் தவறி குழந்தைகளைத் தமிழ்வழிக் கல்வியில் படிக்க வைக்கும் பெற்றோர் எவரையும் பார்த்து இந்தக் கல்வியாளர்கள் உடனடியாகக் கேட்கும் கேள்வி: “உங்க புள்ளைக்கு இங்கிலீஷ் எப்படி வரும்?” தமிழ் தெரியாமல் போனால்தான் ஆங்கிலம் குழந்தைகளின் நாக்கில் நன்கு தவழும் என்பது இவர்களின் உறுதியான கருத்து. இது எவ்வளவு மோசமான குருட்டு நம்பிக்கை என்பதை இரு அமெரிக்க ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

அமெரிக்கக் கல்வித் துறை ரமிரெஸ் எட் அல் 1991 (ramirez et al 1991) என்ற பெயரில் பெரும் பொருட்செலவில் சுமார் 8 ஆண்டுகள் ஸ்பானியத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களிடம் ஆய்வொன்றை மேற்கொண்டது. அம்மாணவர்களுக்குச் சிறந்த பயிற்று மொழி ஆங்கிலமா? ஸ்பானியமா? எனக் கண்டறிவதே ஆய்வின் நோக்கம். இந்த ஆய்வில் 2,342 மாணவர்கள் 3 குழுக்களாகக் கலந்து கொண்டனர். முதல் குழுவினர் ஆரம்பம் முதல் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலவழியில் மட்டுமே பயின்றனர். இரண்டாம் குழுவினர் முதல் ஓரிரண்டு ஆண்டுகள் ஸ்பானிய மொழியில் பயின்று விட்டு, பிறகு ஆங்கிலவழிக் கல்விக்கு மாறினர். மூன்றாவது குழுவினர் முதல் 4 அல்லது 6 ஆண்டுகள் அனைத்தையும் ஸ்பானிய மொழியில் மட்டுமே பயின்றாலும், ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாக மட்டும் கற்றுக் கொண்டனர். அதன் பிறகு அவர்கள் ஆங்கில வழிக்கு மாறினர்.

சில ஆண்டு கழிந்து மூன்று குழு மாணவர்களிடமும் அறிவுத்திறன், ஆங்கில ஆற்றல் குறித்த சோதனைகள் நடந்தேறின, பின்னர் முடிவுகள் வெளியாயின.

தொடக்கத்திலேயே ஆங்கிலவழியில் பயின்ற மாணவர்களின் மூளையில் இங்கிலீஷ் பொங்கி வழியும் என நம் தமிழ்ப் பெற்றோர்கள் கண்ணை மூடிக் கொண்டு சொல்லி விடுவார்கள், அல்லவா? ஆனால் கிடைத்த முடிவுகளோ வேறு. அனைத்தையும் தாய்மொழி ஸ்பானியத்தில் மட்டுமே பயின்ற 3ஆம் குழுவினர் அறிவுத் திறத்தில் மட்டுமல்லாது, ஆங்கில ஆற்றலிலும் முதலிடம் பிடித்தனர். அனைத்தையும் ஆங்கிலத்தில் பயின்ற முதல் குழுவினருக்கோ மூன்றாம் இடந்தான் கிடைத்தது.

இதே அடிப்படையில் தாமஸ், – கால்லியர் ஆய்வு அமெரிக்கக் கல்விதுறையின் நிதியுதவியுடன் 6 ஆண்டு (1996–2001) நடைபெற்றது. ஆனால் இப்போது அந்த 3 குழுக்களில் சுமார் 2 இலட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். மொழிச் சிறுபான்மையினருக்காக இன்றுவரை உலகில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் மிகப் பெரியது இது. இப்போதுங்கூட தாய்மொழியில் பயின்ற ஸ்பானிய மாணவர்களே அறிவுத் திறனிலும் ஆங்கிலப் புலமையிலும் ஓங்கி நின்றனர்.

ஒரு மாணவர் தாய்மொழி தமிழில் எந்தளவுக்கு வலுவாக இருக்கிறாரோ, அவர் அந்தளவுக்கு ஆங்கிலம் உள்ளிட்ட உலகின் எந்த மொழியையும் எளிதில் கற்கலாம் என்றும், உலகின் எந்த அறிவைப் பயிலவும் தாய்மொழி தமிழே சிறந்தது என்றும் தமிழ்க் கல்வியாளர்கள் நீண்ட நாள் கூறி வரும் கூற்றுகளுக்கு இவ்விரு அமெரிக்க ஆய்வுகளே சான்றாகின்றன. நம் தமிழர்களுக்கு நம் தமிழறிஞர்களின் பேச்சுதான் காதில் விழாது. அவர்களே வியந்து நோக்கும் இந்த அமெரிக்கர்களின் பார்வையேனும் காதில் விழுமா? ❖



## மே 5 நூற்றாண்டு நினைவு நாள்

புலியும் பசுவும் ஒரு துறையில் இறங்கி நீரருந்திய தன்ம தேசம் மனிதனோடு மனிதன் இறங்கி நீரருந்தற்கு இடமில்லா அதன்ம தேசமாகிவிட்டதே.

**பண்டிதர் க. அயோத்திதாசர்**

பண்டிதர் க. அயோத்திதாசர் (1845–1914) நவீன இந்தியாவின் மாபெரும் அறிஞர்களுள் ஒருவர். தமிழ்–பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்துத் தீவிரமாகச் செயல்பட்டவர். காலனியாதிக்கத்தின் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்த இவர், சமத்துவம், பகுத்தறிவு, நவீனத்துவம் முதலான கொள்கைப் புரட்சியாளர் அம்பேத்கருக்கும் முன்னோடியாக விளங்கினார். ஒரு பைசாத் தமிழன் (1907–1914) பத்திரிகையின் மூலம் சாதி, மதமற்ற தமிழ்த் தேசியக் கருத்தியலைக் கட்டமைத்தவர்.

MOTHER'S GRACE OFFSET
0413 2336204, 2336205


முள்ளிவாய்க்கால் 5ஆம் ஆண்டு நினைவெழுச்சி
லண்டன்
சேவ் தமிழ்சு
MULLIVAAIKKAAL - TAMILS GENOCIDE
WE REMEMBER MAY 2009
மே பதினேழு இயக்கம்
யாழ் பல்கலை